முச்சந்தி முரளி



"எத்தினை முறைப்பாடுகள் வந்தாலும் உவையள் உந்தச் சட்டத்தை கொண்டுவரத்தான் போகினம் பாருங்கோ"

Registered as a Newspaper | பக்கங்கள் 12 | விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 75

வெள்ளிக்கிழமை
09 பெப்ரவரி 2024

தை 26 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

## கச்சதீவுத் திருவிழா ஏற்பாடுகள் முழுமை

யாழ்ப்பாணம், பெப். 9
கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா எதிர்வரும் 23 ஆம் மற்றும் 24ஆம் திகதிகளில் ☞ 11

### சரணடைந்த புலிகள் தொடர்பான வழக்கு

# நீதிமன்றத்தில் இராணுவம் முன்னிலையாக உத்தரவு!

கொழும்பு, பெப்ரவரி 9
இறுதிப்போர்க் காலத்தில் சரணடைந்த தமிழீழ விடுதலைப்புலிகள் தொடர்பான தகவல்களை வழங்க மறுத்தமைக்கு எதிராக, மேன்முறை யீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணைக்கு முன்னிலையாகுமாறு இலங்கை இராணுவத்துக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது. ☞ 11

## இனப்பிரச்சினைக்குத் தீர்வில்லாமல் பொருளாதார மீட்சி சாத்தியமில்லை

### சுமந்திரன் எம்.பி. சுட்டிக்காட்டு



கொழும்பு, பெப். 9
தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காணாமல், பொருளாதார மீட்சியை பெற முடியாது. அவ்வாறு செய்யலாம் என நினைத்து முன்னோக்கிப் பயணித்தால் நாடு அதலபாதாளத்துக்குள் செல்வதை எவராலும் தடுக்கமுடியாமல் போகும் என்று இலங்கை ☞ 11

### சாவற்கட்டு மீனவர்களின்

## இறங்குதுறைப் பிரச்சினை: விரைவில் தீர்வு தரப்படும்!

### ஆளுநர் உறுதிமொழி



யாழ்ப்பாணம், பெப். 9
சாவற்கட்டு மீனவர்களின் இறங்குதுறைப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு வழங்கப்படும் என்று வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் அறிவித்தார்.
இறங்குதுறைப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்குமாறு கோரி சாவற்கட்டு மீனவர் ☞ 11

## வடக்கின் அபிவிருத்திக்கு நெதர்லாந்து பங்களிக்கும்

### யாழின் தண்ணீர்த் தேவைக்கும் உதவி துணைத்தூதர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 9
வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தித் திட்டங்களுக்குத் தேவையான பங்களிப்பைச் செய்யத் தயார் என நெதர்லாந்து துணைத்தூதுவர் தெரிவித்துள்ளார். ☞ 11

## டிப்பர் மோதியதில் 4 பேருக்கு காயம்

### நெல்லை உலர விட்டவர்களுக்கே இந்தக்கதி

வன்னேரிக்குளம், பெப். 9
நெல் உலரவிட்டுக் கொண்டிருந்தவர்களுடன் டிப்பர் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் ஒரு சிறுவன் உட்பட நால்வர் படுகாயமடைந்தனர்.
கிளிநொச்சி – பூநகரி, சாமிப்புலம் பாடசாலைக்கு முன்பாக நேற்றுமுன்தினம் இரவு இந்தச் சம்பவம் ☞ 11

## எரிபொருள் விநியோகம்: வருகின்றது அமெரிக்கா

### வல்லரசுகளின் மோதலுக்குள் அகப்படுகின்றதா இலங்கை?

கொழும்பு, பெப். 9
இலங்கையில் எரிபொருள் விற்பனையில் ஈடுபடுவதற்கு அமெரிக்காவின் ஆர்.எம்.பார்க் நிறுவனம் உரிய கட்டணங்களை வைப்புச் செய்துள்ளது. விரைவில் அது தனது செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளது என்று ☞ 11

### 2023 இல் யாழ். போதனாவில்

## விபத்துக் காயங்களால் 76 பேர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், பெப். 9
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கடந்த வருடம் இடம்பெற்ற விபத்துகளில் சிக்கி, சிகிச்சைக்குச் சேர்க்கப்பட்டோரில் 76 பேர் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ☞ 11

## மோ.சைக்கிளில் சென்றவரை மோதி விழுத்தி வாள்வெட்டு!

### இளைஞருக்குப் படுகாயம்!

யாழ்ப்பாணம், பெப். 9
மோட்டார்சைக்கிளில் பயணித்தவரை மோதிவிழுத்திவிட்டு அவர்மீது வாள்வெட்டு நடத்தப்பட்டுள்ளது. தாக்குதலில் படுகாயமடைந்த இளைஞர் மீட்கப்பட்டு ஆபத்தான நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ☞ 11

## ஜனாதிபதித் தேர்தல் ஒக்ரோபரில் நிச்சயம்

### அமைச்சர் நிமால் தெரிவிப்பு



கொழும்பு, பெப். 9
ஒக்ரோபரில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படும். தேர்தலை எதிர்கொள்வதற்கும் நாம் தயார். எதிரணிகளையும் தயாராகுமாறு கோருகின்றேன் - இவ்வாறு நாடாளுமன்றத்தில் நேற்று அறிவித்தார் மூத்த அமைச்சரான நிமால் சிறிபால டி சில்வா.
ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீது நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்திலேயே அவர் இவ்வாறு கூறினார்.
"எதிரணியினர் தேர்தல், தேர்தல் எனக் கூக்குரலிடுகின்றனர். சர்வதேச நாணய ☞ 11



## பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் இதுவரை 30 முறைப்பாடுகள்

கொழும்பு, பெப். 9
உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து உயர் நீதிமன்றத்தில் இதுவரை 30 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன சபைக்கு அறிவித்தார்.
நாடாளுமன்றம் நேற்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியது. ☞ 11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலைவிழா

இணுவில், பெப்.9

இணுவில் பொதுநூலக சிறுவர் திறன் விருத்தி மையத்தின் கலைவிழா, பட்டமளிப்புவிழா என்பன இணுவில் பொது நூலக கலாசார மண்டபத்தில் பொதுநூலகத் தலைவர் ம.கஜந்தரூபன் தலைமையில் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

விழாவில் வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரன்ஸ் பிரதம விருந்தினராகவும், வலிகாமம் வலய முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி உதவிக் கல்விப் பணிப்பாளர் ச.கிருபானந்தன், ஓய்வுநிலை மதுவரி அத்தியட்சகர் நா.கிருபாகரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ப-66)

# கொட்டப்படும் கழிவுகளால் கிராமம் முழுதும் துர்நாற்றம்

### உமையாள்புரம் மக்கள் விசனம்

**கிளிநொச்சி, பெப்.9**

**கிளிநொச்சி, உமையாள்புரத்தில் கொட்டப்படும் கழிவுகளால் அங்கு வாழும் 50க்கும் மேற்பட்ட குடும்பங்கள் சுகாதாரச் சீர்கேடுகளை எதிர்கொண்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.**

கிளிநொச்சி, பரந்தன் நகரங்களின் கழிவுகள் உமையாள்புரத்தின் ரயில் பாதையைக் கடந்து சுட்டதீவுப் பகுதியில் கொட்டப்படுகின்றன. அதனால் அந்த வீதி சேறும், சகதியுமாகக் காணப்படுகின்றது.

அங்கு கொட்டப்படும் கழிவுகளால் கடும் துர்நாற்றம் எழுகின்றது. பாடசாலை மற்றும் குடியிருப்புகளுக்குள் துர்நாற்றம் வீசுவதால் மாணவர்கள் கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதுள்ளது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ப-13)

## தமிழக மீனவர் கைது!

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லைதாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து தமிழக மீனவர்கள் 19 பேரை இலங்கைக் கடற்படை நேற்றுக் கைது செய்துள்ளது.

நெடுந்தீவு கடற்பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இலங்கைக் கடற்படையினர் அங்கு எல்லைதாண்டி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட தமிழக மீனவர்கள் 19 பேரை 2 படகுகளுடன் நேற்று வியாழக்கிழமை கைது செய்துள்ளனர்.

அவர்களை நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்திய போது எதிர்வரும் 22ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (ஒ-100,125)

## வட இலங்கை சங்கீதசபை சான்றிதழ்கள் விரைவில்

யாழ்ப்பாணம், பெப்.9

வட இலங்கை சங்கீதசபையின் பரீட்சையில் தோற்றி சித்திபெற்ற பரீட்சார்த்திகளுக்கான சான்றிதழ்கள் வெகுவிரைவில் வழங்கப்படும் என வட இலங்கை சங்கீதசபைத் தலைவரும் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளருமான ரவிச்சந்திரன் தெரிவித்தார்.

வட இலங்கை சங்கீதசபை பரீட்சைக்குப் பரீட்சார்த்திகள் கட்டணம் செலுத்தியே தோற்றுகின்றார்கள்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக நடத்தப்பட்ட பரீட்சையின் சான்றிதழ்கள் வழங்கப்படவில்லை. விரைவில் அந்தச் சான்றிதழ்கள் வழங்கப்படும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ப-125)

## நெற்பயிரை அழிக்கும் யானைகள்

முல்லைத்தீவு, பெப்.9

புதுக்குடியிருப்புக்கும் வற்றாப்பளைக்குமிடையில் மேற்கொள்ளப்பட்டுள்ள நெற்பயிர்ச்செய்கையை யானைகள் அழிக்கின்றன என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

அறுவடைக்குத் தயாராகவுள்ள நெற்பயிர்களைக் கேப்பாபிலவு காட்டு வழியாக வரும் யானைகள் அழிக்கின்றன.

பயிர்ச்செய்கை தொடர்பான கூட்டங்களில் யானைகளைக் கட்டுப்படுத்துவதற்கு யானை வேலி அமைக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர். (ப-13)

# டெங்குத் தொற்றைத் தணிக்க காணிகளைத் துப்புரவாக்குக

### *சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி அறிவுரை*

சாவகச்சேரி, பெப்.9

சாவகச்சேரிப் பிரதேசத்தில் மக்கள் தமது குடியிருப்பு மற்றும் காணிகளைத் துப்புரவாக வைத்திருக்கவேண்டும் என்று சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் சி. சுதோகுமார் அறிவுறுத்தியுள்ளார்.

இடையிடையே மழை பெய்து வருவதால் டெங்குத் தொற்று அதிகரிக்கின்றது. தமது குடியிருப்புகள் மற்றும் காணிகளைத் துப்புரவாக வைத்திருக்கவேண்டும் என்று பிரதேச மக்களுக்குப் பல தடவைகள் அறிவுறுத்தப்பட்டுள்ளது. பலதடவைகள் திணைக்களங்களுடன் இணைந்து டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார். (ப-9)

## துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்!

வவுனியாப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் தம்பு மங்களேஸ்வரனின் பதவிக்காலம் எதிர்வரும் ஜூலை மாதம் 13 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ள நிலையில் புதிய துணைவேந்தர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆர்வமுடையவர்கள் தமது விண்ணப்பங்களை இந்த மாதம் 21ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு முன்னர் பல்கலைக்கழகப் பதிவாளருக்குக் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அனுப்ப வேண்டும் என்றும், விண்ணப்பம் மற்றும் ஆவணங்களின் மென்பிரதி பதிவாளரது மின்னஞ்சலுக்கு அனுப்பப்படவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-26)

## அபிராமி அந்தாதி பாராயணம்

யாழ்ப்பாணம், பெப்.9

விடத்தற்பளை, வயலூர் அலங்காரக்கந்த சுவாமி ஆலயத்தில் அமைந்துள்ள அம்பாள் சந்நிதானத்தில் இன்று வெள்ளிக்கிழமைகாலை 8 மணிக்கு அபிராமி அந்தாதி பாராயணம் செய்யப்பட்டு அம்பாளுக்கு விசேட பூசைவழிபாடு நடைபெறும். (எ-இ)



## ஓடும் பஸ்ஸில் சில்மிஷம் சிக்கிய ரோமியோக்கள்!

கொழும்பு, பெப்.9

பொதுப் போக்குவரத்து சேவைகளில் பெண்களிடம் அநாகரிமான முறையில் நடந்துகொள்பவர்களைக் கண்டறியும் விசேட நடவடிக்கையில் பலர் சிக்கியுள்ளனர் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நடவடிக்கையில் இதுவரை 42 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் பொதுப்போக்குவரத்தில் திருட்டுச் சம்பவங்கள் உள்ளிட்ட குற்றச்செயல்களில் ஈடுபட்ட 24 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த விசேட வேலைத்திட்டத்துக்காக சிவில் உடையில் பல பொலிஸ் குழுக்கள் களமிறக்கப்பட்டுள்ளன என்றும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-இ)

## பேருந்தில் சில்மிஷம் யாழில் இருவர் கைது

யாழ்ப்பாணம், பெப். 9

பொதுப்போக்குவரத்தில் பெண்களுடன் முறைகேடாக நடந்து கொண்ட குற்றச்சாட்டில் அராலியைச் சேர்ந்த 22 மற்றும் 24 வயதான இளைஞர்கள் இருவர் யாழ்ப்பாணப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர், நேற்றுமுன்தினம் இரவு பயணித்த பேருந்தில் பயணிகளுடன் ஒன்றாகப் பயணித்துள்ளனர். அப்போது பெண்களுடன் முறைகேடாக நடந்துகொண்ட குற்றச்சாட்டில் இரண்டு இளைஞர்களையும் கைதுசெய்துள்ளனர்.

பொதுப்போக்குவரத்தில் பெண்களுடன் அத்துமீறி நடந்து கொள்பவர்களைக் கைது செய்வதற்கான விசேட நடவடிக்கை நாடு முழுவதும் முன்னெடுக்கப்படுகின்றது. (ஒ-26)

## அபிராமிப்பட்டர் விழா

யாழ்ப்பாணம், பெப்.9

சுழிபுரம், கம்பனை அருள்மிகு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய அபிராமிப்பட்டர் விழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது. தொடர்ந்து விசேட பூஜைகளும் அம்பாள் திருவீதி உலா வரும் நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

நிகழ்வில் அடியவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஆலயத் தொண்டர் சபையினர் அறிவித்துள்ளனர். (ப-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் வளங்களூடாக வருமானம் ஈட்டுங்கள்!

*கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டு*



**கொழும்பு, பெப்.9**
**நாட்டிலுள்ள வளங்களைப் பயன்படுத்திக் கொள்வதில் பல்வேறு தடைகள் எழுகின்றன என்பதற்காக நாட்டின் வளங்களைப் பயன் படுத்திக் கொள்வதை நிறுத்தினால் நாடு மீட்சியுறாது.**

-இவ்வாறு ஜனாதிபதி அமை யத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கைத்தொழில் இரா ஜாங்க அமைச்சர் சாமர சம் பத் தசனாயக்க தெரிவித்தார்.

சிமெந்துக் கூட்டுத்தாபனத் துக்குச் சொந்தமான 5 ஆயி ரம் ஏக்கர் காணியில் வருடாந் தம் 300 மில்லியன் டொலர் வருமானம் ஈட்டத் திட்டமிடப்பட் டுள்ளது. இதனூடாக வருடத் துக்கு சுமார் 300 மில்லியன் டொலர் வருமானம் ஈட்ட எதிர் பார்க்கப்படுகிறது.

கடந்த வருட இறுதிக்குள் இரத் தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை மூலம் சுமார் 480 மில்லியன் டொலர் வரு மானம் ஈட்டப்பட்டுள்ளது.

வாழைச்சேனை காகிதத் தொழிற்சாலையையும் மீண் டும் ஆரம்பித்து தொடர்ந்து செயற்படுத்தும் நிலைக்குக் கொண்டுவந்துள்ளோம்.

நாடு பொருளாதார வீழ்ச்சி அடைந்திருக்கும் வேளை யில் நாட்டு வளங்களை எமக் குக்கைகொடுக்கக்கூடியவாறு மாற்றியமைக்கவேண்டும் - என்றார். (ச-இ)

## சிறாருக்கு சத்துணவு

கொழும்பு, பெப்.9
கல்வியமைச்சு, விவ சாயப் பெருந்தோட்டத் துறை அமைச்சு, உலக உணவுத் திட்டம், தேசிய உணவு ஊக்குவிப்புச் சபை, 'பில் அன்ட் மெலின்டா கேற் பவுண் டேஷன்' என்பன இணைந்து 5 இலட்சம் சிறுவர்களுக்கு எட்டு மாத காலத்துக்கு சத்து ணவு வழங்கும் திட் டத்தை இந்த மாதம் முதலாம் திகதி முதல் ஆரம்பித்துள்ளன.

இந்தத் திட்டத்தினூடாக சிறுவர்களுக்கு ஏற்படும் நோய்களிலிருந்து அவர் களைப் பாதுகாக்க முடி யும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ப-6)

# ஜனாதிபதியின் கீழ் சுற்றாடல்அமைச்சு

## வர்த்தமானி வெளியீடு

கொழும்பு, பெப்.9
சுற்றாடல் அமைச்சர் பதவியை ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க வின் கீழ் கொண்டுவரும் வகை யில் விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. ஜனாதி பதி செயலகம் இந்த வர்த்த மானியை வெளியிட்டுள்ளது.

பிரதமருடன் கலந்தாலோசித்த தன் பின்னர் இந்தத் தீர்மா னம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, முன்னாள் சுகா தார அமைச்சரான கெஹலிய ரம்புக்வெல தரமற்ற மருந்து களை இறக்குமதி செய்வதற்கு அனுமதித்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறி யலில் வைக்கப்பட்ட நிலையில், அவர் தனது சுற்றாடல் அமைச் சுப் பதவியிலிருந்து அண்மை யில் விலகியிருந்தார். (ச-இ)

## பொலிஸார் மீதும் சட்டப் பிரயோகம்

கொழும்பு, பெப்.9
குற்றச் செயல்களில் ஈடுபட்டுவரும் தரப்பு களுடன் தொடர்புடைய வர்களுக்கு ஆதரவ ளிக்கும் பொலிஸா ரும் கண்காணிக்கப் பட்டு தண்டிக்கப்படுவர் என்று பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் எச்ச ரித்துள்ளார்.

குற்றச்செயல்களை மேற்கொள்வோருடன் தொடர்புபேணும் பொலிஸ் உத்தியோகத் தர்கள் மற்றும் அதிகா ரிகள் தராதரம் பாராது தண்டிக்கப்படுவர் என் றும் அவர் சுட்டிக்காட்டி யுள்ளார். (ச-இ)

## காம்பியா முறையில் கஜூ மரச்செய்கை!

கொழும்பு, பெப்.9
மரமுந்திரிகை (கஜூ) பயிர்ச் செய்கையில் காம்பியா பயன்ப டுத்தும் சாகுபடி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவற்கு இலங்கையின் காம் பியாத் தூதுவர் ஆதரவு தெரிவித்துள்ளார்.



இலங்கைக்கான காம்பியாத் தூதுவர் முஸ் தபா ஜவரவுக்கும் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவுக்கும் இடையே இடம் பெற்ற கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையைப் போன்று சிறிய விவசாய நாடாக காம்பியா காணப்பட்டாலும் கடலை, மரமுந்திரிகை போன்ற பயிர்களில் தன்னி றைவு பெற்றுள்ளது.

அதற்கமைய் மரமுந்திரிகை சாகுபடியில் காம்பியா பயன்படுத்தும் தொழில்நுட்ப ஆத ரவை வழங்குமாறு தூதுவர் விவசாய அமைச்சர் கோரிக்கை விடுத்தார். (ச-இ)

## பங்குச்சந்தை வதந்திகள்; முறையிட வசதி

கொழும்பு, பெப்.9
கொழும்பு பங்குப்பரி வர்த்தனை நிலைய மானது பங்குச் சந்தை செயற்பாடு கள் தொடர்பில் பிழை யான தகவல்களை வழங்கும் சமூக ஊட கங்கள் பற்றி முறை யிடுவதற்கென இணையத்தளத்து டன் இணைந்த பொறி முறையை அறிமுகம் செய்துள்ளது.

அதன்படி www.sec.gov.lk/reportsuspectedmarketrelatedwrongdoingmisconductonsocialmedia என்னும் இணையத் தளம் ஊடாகப் பொது மக்கள் முறையிட லாமென அறிவித் துள்ளது. (ப-6)




**'த**லைவாரிப் பூச்சூடி உன்னைப் பாடசாலைக்குப் போ என்று சொன்னாள் உன் அன்னை' இப்படி பொம்பிளைப் பிள்ளையள் பள்ளிக்கூடம் போறதைப் பற்றி பாரதிதாசன் எழுதின பாட்டை எல்லாரும் படிச்சிருப்பம். ஆனால் இப்ப என்னடாவெண்டால் தலைவாரி, பின்னிக் கட்டிக்கொண்டு போனதால பிள்ளையளுக்கு ஒரு பள்ளிக்கூடத்தில கடும் பேச்சு விழுந்திருக்காம்.

பளைப் பக்கத்தில உள்ள பிரைமரிப் பள்ளிக்கூடம் ஒண்டிலதான் இந்தச் சம்பவம் நடந்திருக்கு. அந்தப் பள்ளிக்கூடப் பிரின்சிப்பல் படிப்பு விசயத்தில கடுமைதான். அவரின்ர நிர்வாகக் கெட்டித்தனத்தால பள்ளிக்கூடம் படிப்பில முன்னுக்கு வந்துகொண்டிருக்கு. இந்த வருசமும் அந்தப் பள்ளிக்கூடத்தில பதினொரு பிள்ளையள் கொலசிப் பாஸ் பண்ணினதுகள். இப்பிடி யெல்லாம் பள்ளிக்கூடப் பிள்ளையளின்ர படிப்பில கண்ணும் கருத்துமா இருந்த பிரின்சிப்பல், இப்ப அதெல்லாத்துக்கும் கண்ணூறு கழிக்கிற மாதிரி ஒரு வேலை செய்துபோட்டார் எண்டதுதான் எல்லாருக்கும் கவலை.

இப்ப பள்ளிக்கூடத்தில மூண்டாம் தவணைச் சோதி னையள் நடக்குது. இந்தப் பள்ளிக்கூடத்தில அஞ்சாம் ஆண்டுக்கு மேல வகுப்புகள் இல்லையெண்டதால, வேற பள்ளிக்கூடத்துக்குத்தான் ஆறாம் ஆண்டு படிக்கி றதுக்காகப் பிள்ளையள் போகோணும். ஆறாம் ஆண் டுக்கு வந்து பெரிய பள்ளிக்கூடமும் போகப் போறதால 'எங்கட பிள்ளையள் இனி பெரிய பிள்ளையள்' எண்ட நினைப்பு பெற்றாருக்கும் வந்திடும். அதால இவ்வளவு நாளும் தங்கட பொம்பிளைப் பிள்ளையளுக்கு கீரைப்பிடி மாதிரி இருந்த தலைமுடியை கொஞ்சம் வளர்த்து பின்னிக்கட்டி சோதினைக்கு அனுப்பி இருக்கினம். அதைப் பார்த்தவுடன பிரின்சிப்பலுக்கு ஏனோ மூக்குக்கு மேல கோபம் வந்திட்டுது. 'இப்பிடி எல்லாம் பின்னிக்கட்டிக்கொண்டு பள்ளிக்கூடத்துக்கு வர ஏலாது. இண்டைக்கே சலூனுக்கு கூட்டிக்கொண்டு போய் கட்டையா வெட்டி, கிளிப் குத்தித்தான் நாளைக்கு பிள்ளை வரவேணும். அப்பிடியில்லாமல் இப்பிடி பின்னிக்கட்டிக்கொண்டு வந்தால் 'லீவிங் சேர்ட்டி பிக்கெட்'(பாடசாலை விடுகைப் பத்திரம்) தரமாட்டன்' எண்டு கடுமையாச் சொல்லியிருக்கிறார். இதைக் கேட்டவுடன பெற்றாருக்கு என்ன செய்யிறதெண்டு தெரியேலை.

'எங்கட பிள்ளையள் ஒழுங்கா தலைவாரி, பின்னிக் கட்டிக்கொண்டு போறதில என்ன பிழை? அப்பிடி வரக் கூடாது என்டு சட்டமொண்டுமில்லையே. உண்மையா பிள்ளையளின்ர தலைமுடியை ஒட்ட வெட்டுற உந்த டயானா கட், பொப் கட் தான் வெளிநாட்டு ஸ்ரைல். எங்கட பிள்ளையள் எப்பிடி தலை இழுக்கோணும் எண்டு இல்லாத ரூல்ஸை அதிபர் போடுறார். உது எந்த வகையில நியாயம்?' எண்டு பெற்றார் உள்ளுக்க புழுங்கினாலும், தங்கட பிள்ளையள் பிரச்சினை இல் லாமல் மூண்டாம் தவணைச் சோதினை எழுதி, பெரிய பள்ளிக்கூடத்துக்கு பிரச்சினை இல்லாமல் போக வேணுமே எண்ட ஆதங்கத்தில பேசாமல் இருக்கினம். ஆனாலும் ஒரு சிலர் இதை மாகாண மட்டத்தில உள்ள அதிகாரியளிட்ட முறையிடலாமோ எண்டு யோசிக்கின மாம். நல்லகாலம், பாரதிதாசன் இப்ப இருந்திருந்தால் தலைமுடியை கட்டையா வெட்டி உன்னை பாட சாலைக்கு வா என்று சொன்னார் உன் அதிபர் எண்டு தான் படிச்சிருக்க வேணும் கண்டியளோ.



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கசிப்புடன் பெண் கைது

யாழ்ப்பாணம், பெப்.9

கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

கோப்பாய் மத்தி அத்தியார் வீதியிலுள்ள வீடொன்றில் கசிப்பைக் காய்ச்சி விற்பனை செய்த குற்றச்சாட்டிலேயே 52 வயதான பெண் 10 லீற்றர் கசிப்புடன் கைதாகியுள்ளார். யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து தண்டப்பணம் விதித்து நீதிமன்று கடுமையாக எச்சரிக்கை செய்து விடுவித்துள்ளது. (ஒ-125)

# முல்லைத்தீவு சாலை ஆற்றை துப்புரவாக்கக் கோரிக்கை

முல்லைத்தீவு, பெப்.9

முல்லைத்தீவு சாலை ஆற்றைத் துப்புரவு செய்யவேண்டும் என்று இந்த ஆற்றில் மீன்பிடியில் ஈடுபட்டுள்ள கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நந்திக் கடலில் கடற்றொழிலாளர்கள் தொழிலில் ஈடுபட்டுள்ளதைப்போல சாலை ஆற்றிலும் பெருமளவு கடற்றொழிலாளர்கள் கடல் உணவுகளைப் பிடிப்பதில் ஈடுபட்டுள்ளனர். 2009 ஆம் ஆண்டு குறித்த பகுதியில் இடம்பெற்ற போருக்காக அமைக்கப்பட்ட மண் அணைகள், பதுங்குகுழிகள் என்பன தற்போது கரைந்து, சாலை ஆற்றில் சேறாக மாறியதால் கடல் உணவுகளின் பெருக்கம் குறைந்து காணப்படுகின்றது. இதனால் சாலை ஆற்றைத் துப்புரவு செய்து தர வேண்டும் என்று கடற்றொழிலாளர்கள் வேண்டியுள்ளனர். (ப-13)

## ஆவணப்படக்காட்சி

யாழ்ப்பாணம், பெப்.9

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்துக்குப் பின்புறம் அமைந்துள்ள 'எச்.என்.பி'வங்கியின் கலையகத்தில் ஒரு போராட்டத்தின் கூறுகள் (Anatomy of a protest) ஆவணப் படத்திரையிடலும் கலந்துரையாடலும் நாளை சனிக்கிழமை பி.ப. 4 மணியிலிருந்து 7 மணிவரை இடம்பெறவுள்ளன. (ப-159)

விழிப்புலனற்றோர் சங்கத்தால்


# 'மோட்ச நிதியம்' அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், பெப். 9

யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தால் பொருளாதாரம் நலிவுற்ற பார்வையற்றவர்களின் இறுதிச் சடங்குக்கு உதவும் வகையில் 'சிவகுமாரன் மோட்ச நிதியம்' என்ற புதிய தர்மப்பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ். விழிப்புலனற்றோர் சங்க ஸ்தாபர் இ.சிவகுமாரனின் நிதி அன்பளிப்பில் யாழ். மக்கள் வங்கிக் கிளையில் 10420024 0011261 எனும் கணக்கிலக்கத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

பார்வையற்றவர்களின் இறப்புக் கிரியைகளை ஆற்றுவதற்கான தர்மப்பணிக்கு அன்பளிப்புச் செய்ய விரும்புவோர் மேற்கண்ட கணக்கிலக்கத்துக்கு அன்பளிப்புச் செய்யலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)



# யோகா கற்கைநெறி புதிய பிரிவு

யாழ்ப்பாணம், பெப்.9

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகால் உடல், உள மேம்பாட்டுக்காக இலவசமாக நடத்தப்பட்டு வரும் யோகக்கலை கற்கைநெறியின் புதிய பிரிவு ஆரம்பமாகவுள்ளது.

நல்லூர்க் கந்தன் ஆலயப் பின் வீதியிலுள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் எதிர்வரும் 17ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

சனி, ஞாயிறு தினங்களிலும் அரச விடுமுறை தினங்களிலும் காலை 6 மணி முதல் காலை 8 மணிவரை இந்தக் கற்கை நெறி நடைபெறும்.

பயிலவிரும்புவோர் நேரடியாக வந்து பதிவுகளை மேற்கொண்டு வகுப்பில் இணைந்து கொள்ளலாம் என்றும் மேலதிக தகவல்களை 021 222 2203 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம் எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் ம. பற்றிக் டிறஞ்சன் அறிவித்துள்ளார். (ச)




# சைக்கிளோட்டத்தில் வென்ற தாயும், மகளும்

யாழ்ப்பாணம், பெப்.9

கொடிகாமம் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கமும் சிறுவர் கழகமும் இணைந்து தைப்பொங்கல் விழாவை முன்னிட்டு நடத்திய சைக்கிள் ஓட்டப் போட்டியில் தாயும் மகளும் முதலிரண்டு இடங்களைப் பெற்றுள்ளனர்.

ஆனையிறவு தேசிய உப்பு உற்பத்தி நிறுவனத்தின் உத்தியோகத்தரும் முன்னாள் சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினருமான வி.பாரத்பத்மாவும் அவரது மகளுமே முதல் இரு இடங்களையும் பெற்றுள்ளனர். (ச-159)

# திறன் விருத்தி பாடநெறிகள்

தெல்லிப்பழை கலாசார மத்திய நிலையத்தினரால் 2024 ஆம் ஆண்டுக்கான திறன் அபிவிருத்திப் பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கொல்லங்கலட்டி மடத்தடி சிவமகாராஜா நினைவு மண்டபத்தில் கர்நாடக சங்கீதமும், மல்லாகம் நீலியம்பனை விநாயகர் ஆலயத்துக்கு முன்பாக உள்ள ஆசிரியர் இல்லம் மற்றும் பன்னாலை சிவபூதவராயர் ஆலய மண்டபம் ஆகியவற்றில் பரதநாட்டியமும் நடைபெறுகின்றன.

ஒன்பது மாதங்களைக் கொண்ட இப்பாடநெறிகள் இலவசமாக நடத்தப்படுவதுடன், வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு அமைச்சால் சான்றிதழ் வழங்கப்படும் எனவும் தெரிவித்துள்ளனர். (ப-66)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர் நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். வியாபாரத்தில் புது உத்தியைக் கையாளுவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்புக்கு பாராட்டுக் கிடைக்கும். தொட்டது துலங்கும் நாள்.

**இடபம்:** குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். உறவினர்களின் அன்புத்தொல்லை குறையும். வியாபாரத்தில் புது சலுகைகளை அறிவிப்பீர்கள்.

**மிதுனம்:** தடைகளை கண்டு தளரமாட்டீர்கள். உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். புது வேலை கிடைக்கும். பயணங்களால் ஆதாயம் உண்டு. உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும்.

**கடகம்:** குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். பூர்வீக சொத்துப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும். விருந்தினர் வருகையை அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும்.

**சிம்மம்:** வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். நண்பர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். ஆடை ஆபரணம் சேரும். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும்.

**கன்னி:** மற்றவர்களைப் பற்றி வீண் விமர்சனங்களை தவிர்ப்பது நல்லது. வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் குறைவார்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். பேச்சில் இங்கிதம் தேவைப்படும் நாள்.

**துலாம்:** அனுசரித்துப் போவது நல்லது. யாரையும் பரிந்துரை செய்ய வேண்டாம். பணம் வாங்கித் தருவதில் குறுக்கே நிற்காதீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிகளுடன் விவாதம் வேண்டாம். முன்னேறும் நாள்.

**விருச்சிகம்:** உங்களுடைய ஆலோசனைகள் எல்லோரும் ஏற்கும்படி இருக்கும். ஒத்துழைப்பு அதிகரிக்கும். திடீரென்று அறிமுகமாகுபவரால் பயனடைவீர்கள். பொதுக்காரியங்களில் ஈடுபடுவீர்கள்.

**தனுசு:** சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயற்படுவீர்கள். உறவினர் நண்பர்களுடன் மனம்விட்டு பேசுவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். சாதிக்கும் நாள்.

**மகரம்:** உங்கள் பிடிவாதப் போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். வியாபாரம் சூடு பிடிக்கும். உத்தியோகத்தில் தலைமையின் ஆதரவு கிட்டும்.

**கும்பம்:** உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வு மனப்பான்மை வந்து செல்லும். தன்னம்பிக்கை குறையும். உறவினர் நண்பர்களால் செலவினங்கள் அதிகரிக்கும். சிலரின் தவறான செயல்களை எண்ணி வருந்துவீர்கள்.

**மீனம்:** பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். புது நட்பால் உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


# இன்னுமொரு வாய்ப்பந்தல்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் கொள்கை விளக்க உரையை நிகழ்த்தியிருந்தார். மிக நீண்ட அவரது உரையில், தன்னால் இந்த நாட்டின் பொருளாதாரம் நிமிர்ந்திருக்கின்றது என்ற சுயபுராணமே அதிகமாகத் தெரிந்தது. தனது இந்த முயற்சிக்கு ஏனைய அரசியல் தரப்புகள் ஆதரவளிக்கத்தான்வேண்டும் என்பது போலவே அந்த உரை அமைந்திருந்தது. பொருளாதார மேம்பாடு மாத்திரமே இந்த நாடு எதிர்நோக்கிக் கொண்டிருக்கக்கூடிய ஒரே சவால் என்பதை அவர் திரும்பத் திரும்ப வலியுறுத்தியிருந்தார். அதைத்தாண்டி வேறு எதுவும் இல்லை என்பதும், பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இன்னமும் பல கட்டங்களைக் கடக்கவேண்டியிருக்கின்றது என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார். குறிப்பாக கடன்களை மீளச் செலுத்தத் தொடங்கும் போது நாடு பெரும் நெருக்கடியைச் சந்திக்கும் என்று குறிப்பிட்டதுடன், ஆட்சியாளர்கள் கடன்களை வாங்கி வாங்கியே குவித்து இந்த நாட்டு மக்களையும் அதற்குப் பழக்கப்படுத்திவிட்டனர் என்றெல்லாம் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் பொருளாதார மீட்சிக்காக சில திட்டங்களையும் அவர் குறிப்பிட்டார். சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு, விவசாயத்தை நவீனமயப்படுத்தி ஏற்றுமதி ஊடாக அந்நியச் செலாவணி, வெளிநாட்டு முதலீடுகள், மாகாணங்களுக்கு இடையிலான போட்டி உற்பத்தி என்று சில விடயங்களைப்பட்டியலிட்டிருந்தார். இவையெல்லாவற்றையும் முன்னெடுப்பதற்கு இருக்கும் தடங்கல்களை மேலோட்டமாகவே கொள்கை விளக்கவுரையில் குறிப்பிட்டிருந்தார். அதை ஆழ அகலமாக அலசி ஆராய்வதற்கு அவர் விரும்பவில்லை. அதை வேண்டுமென்றே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தவிர்த்திருந்தார்.

இந்த நாட்டில் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு எல்லாம் ஆணிவேராக இருக்கின்ற இனப்பிரச்சினை தொடர்பில், அப்படியொன்று இந்த நாட்டில் இருக்கின்றது என்பது தொடர்பில் ஜனாதிபதி ரணில் மூச்சேவிடவில்லை. அதற்குத் தீர்வை எட்டாமல் இந்த நாடு பொருளாதாரத்தில் மீட்சியடைவது என்பது சாத்தியமேயில்லாத விடயம். ஜனாதிபதி ரணில் தனது கொள்கை விளக்கவுரையில், மாகாணங்களுக்கான நிகழ்ச்சிநிரலில் மேலும் சில அதிகாரங்கள் வழங்குவதன் ஊடாக பொருளாதார ரீதியில் உறுதிப்பாடுடையவையாக அவற்றை மாற்ற முடியும் என்று கூறுகிறார். ஆனால், இனப்பிரச்சினைக்கான முழுமையான தீர்வுக்கான யோசனை எதையும் முன்வைக்கவில்லை. கடந்த ஆண்டு சுதந்திர நாளுக்கு முன்னர் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று கூறி, எதுவுமே நடக்காததால் இம்முறை அது தொடர்பில் அலட்டிக் கொள்ளாமல் விட்டிருக்கக்கூடும். ஆனால் இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காணாமல் பொருளாதார மேம்பாடு என்பதை எட்டவே முடியாது என்பதை மிக நீண்ட பழுத்த அரசியல்வாதியான ரணில் விக்கிரமசிங்க உணர்ந்திருந்தும், அதை வெளிக்காட்டாமல் வெறுமனே பூசி மெழுகுவது பொருத்தப்பாடானதாக இல்லை.

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள வேண்டும் என்ற உளரீதியான விருப்பு இருக்குமாக இருந்தால், இனப்பிரச்சினைக்கான நியாயமான தீர்வை - தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளும் தீர்வை முன்வைக்கவேண்டும். வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வரவேண்டும் என்பதை திரும்பத் திரும்பச் சொல்லும் இந்த அரசாங்கம், அவர்கள் தங்கள் முதலீட்டுக்கு இந்த நாடு பாதுகாப்பில்லை என்பதை உணருவதையும் ஏற்றுக் கொள்ளும் அரசாங்கம், அதற்கான காரணங்களைத் தீர்ப்பதற்கு மாத்திரம் தயங்குகின்றது. பொருளாதார நெருக்கடி தீர்க்கப்படாவிட்டாலும் பரவாயில்லை. தமிழ் மக்களுக்கு எந்தவொரு உரிமையும் வழங்கக்கூடாது என்ற எண்ணம் மட்டும் மேலோங்கி நிற்கின்றமை தெளிவாகவே தெரிகின்றது. ஜனாதிபதி ரணிலும் அதற்கு விதிவிலக்கில்லை என்பதைத் தான் அவரது உரை பறைசாற்றியிருக்கின்றது.




# வாக்காளர் பதிவுப் பணி பெப்ரவரிக்குள் நிறைவு!

**கொழும்பு, பெப். 9**

**2024ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பதிவுப் பணியைத் தாமதமின்றி நிறைவு செய்யவேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்தல் விடுத்துள்ளது.**

அதன்படி இம்மாத 29 ஆம் திகதிக்கு முன்னர் இது தொடர்பான பதிவுப் பணிகளை நிறைவு செய்யவேண்டும் என்று ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க அறிவுறுத்தியுள்ளார்.

18 வயதுக்கு மேற்பட்ட குடும்ப உறுப்பினர்கள் அல்லது வீட்டில் தங்கியிருப்பவர்களின் விவரங்கள் அவர்களது வீடுகளில் பெறப்படும் வாக்காளர் பட்டியலில் கட்டாயம் சேர்க்கப்படவேண்டும்.

அதன்படி, நிரந்தர வதிவிடத்தை மாற்றாதவர்கள், திருமணம், கல்வி அல்லது வேறு காரணங்களுக்காக வசிப்பிடத்தை மாற்றியவர்கள் அனைவரும் வாக்காளர் பதிவேட்டில் பதிவு செய்யப்படவேண்டும்.

மேலும், வெளிநாடுகளில் உள்ள குடும்ப உறுப்பினர்களால் வாக்களிக்க முடியாவிட்டாலும் அவர்களின் பெயர்களும் வாக்காளர் இடாப்பில் இடம்பெற வேண்டும் என்றும் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)



## ஆஸிக்கு பறந்தார் ஜனாதிபதி ரணில்

கொழும்பு, பெப்.9

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவுஸ்திரேலியாவுக்கு அதிகாரபூர்வ பயணமொன்றை மேற்கொண்டு நேற்று வியாழக்கிழமை சென்றார்.

இந்தப் பயணத்தில் அவுஸ்திரேலியப் பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோருடனும் ஜனாதிபதி பேச்சு நடத்தவுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## அயோத்தி செல்லும் நாமல்

கொழும்பு, பெப். 9

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச, அயோத்தி இராமர் கோயிலுக்குத் தனிப்பட்ட பயணமொன்றை மேற்கொள்ளவுள்ளார். புதுடில்லியில் தங்கியிருக்கும் காலத்தில் பல்வேறு உயரதிகாரிகளை அவர் சந்திப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (ச-இ)

## சுற்றுலாவிகள் வருகை உயர்வு

இந்த மாதத்தின் முதல் நான்கு நாள்களில் 28 ஆயிரத்து 493 வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் நாட்டை வந்தடைந்துள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

சராசரியாக நாளொன்றில் 7 ஆயிரத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## பண்டிகைக் காலத்தில் நிவாரணமாக அரிசி

கொழும்பு, பெப்.9

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்குத் தலா 20 கிலோ வீதம் அரிசி நிவாரணமாக வழங்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு 'அஸ்வெசும' ஊடாக 24 இலட்சம் பேருக்கு நிவாரணம் அளிக்க எதிர்பார்க்கப்படுகிறது. நாட்டின் வரலாற்றில் இதுவே பெரிய தொகை நிதி மானியம் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (ச-இ)

**நாளை**

10.02.2024
**சனிக்கிழமை**
**தை – 27**
சுபநேரம் : 03.34 – 05.04
ராகுகாலம் : 09.34 – 11.04

**நாளொரு நல்வார்த்தை**

**யார் அதிகமாக கேள்வி கேட்கிறார்களோ, அவர்களே அதிகமாக கற்றுக்கொள்ளவும், தக்கவைத்துக் கொள்ளவும் செய்கிறார்கள்.**

**–பிரான்சிஸ் பெக்கான்–**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தல் ஒத்திவைப்பு ரணிலின் உரையில் எதிரொலிப்பு!

## எதிரணி பிரதம கொறடா தெரிவிப்பு



**கொழும்பு, பெப்.9**

**ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைப்பதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன, ஜனாதிபதியின் கொள்கை விளக்கஉரையும் இதை உறுதிப்படுத்தும் வகையிலேயே அமைந்துள்ளது. எதிரணிகள் ஒன்றிணைந்து இம்முயற்சியைத் தோற்கடிக்க நடவடிக்கை எடுப்போம் என்று எதிரணி பிரதம கொறடாவான நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல கூளுரைத்தார்.**

எதிர்வரும் ஒக்ரோபர்வரை காத்திருக்காமல் முன்கூட்டியே தேர்தலை நடத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளைபிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய லக்ஷ்மன் கிரியெல்ல இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு.

இது தேர்தல் வருடம், எனினும், ஜனாதிபதியின் கொள்கை விளக்கஉரையில் தேர்தல் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஏனெனில் ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைப்பதற்கான முயற்சிகள் இடம்பெற்றுவருகின்றன என்று அறிய முடிகின்றது.

இதற்காக சில சிவில் அமைப்புகளையும் அரசு வளைத்துப்போட்டுள்ளது. அவ்வாறு வளைத்துப்போட்டு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கான யோசனை முன்வைக்கப்படவுள்ளது.

அதைச் செய்வதாக இருந்தால் புதிய அரசமைப்பு அவசியம். அது இயற்றப்படும்வரை தேர்தலை ஒத்திவைக்கலாம் எனக் கோரிக்கை முன்வைக்கப்பட்டு, தேர்தலைப் பிற்போடவே முற்படுகின்றனர் ஆட்சியாளர்கள்.

தற்போதைய நெருக்கடி நிலையில் இருந்து மீள்வதற்கு புதியதொரு அரசு அவசியம்- என்றார். (ஒ-44)

## சனத் நிஷாந்தவின் இறப்பில் சந்தேகம்

### மனைவி முறைப்பாடு

கொழும்பு, பெப்.9

மறைந்த இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் இறப்பில் சந்தேகம் இருப்பதாக அவரது மனைவி குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

அவரின் இறப்புத் தொடர்பான சில காரணங்கள் சந்தேகத்துக்குரியதாக இருக்கின்றன என்றும் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துமாறும் சட்டத்தரணியான அவரது மனைவி சாமரி பிரியங்க குறிப்பிட்டார். (ச-இ)

## மருத்துவமனை வாழ்வுக்காக நாடாளுமன்று செல்லாத கெஹலிய!

கொழும்பு, பெப்.9


சிறைச்சாலை மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகின்ற முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல உடல்நிலையைக் கருத்திற்கொண்டே சபை அமர்வில் பங்கேற்கவில்லை என சிறைச்சாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆனால் நாடாளுமன்ற அமர்வில் பங்கேற்றால், சிறைச்சாலை மருத்துவமனையில் இருக்கமுடியாத நிலை ஏற்படும். அதாவது அவர் நலமாகவே இருக்கின்றார். சிறைக்கு மாற்றவேண்டும் என்ற கோரிக்கை எழலாம். இதனாலேயே சபை அமர்வில் பங்கேற்காமல் இருக்கும் முடிவை அவர் எடுத்திருக்கலாம் என எதிரணி உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (ஒ-44)

## தேசிய மக்கள் சக்தியை கட்சியாக ஏற்கக்கூடாது

கொழும்பு, பெப். 9

அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியை அரசியல் கட்சியாக அங்கீகரிக்கக்கூடாது என சட்டத்தரணி நாகானந்த கொடிதுவக்கு தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் முறையிட்டுள்ளார். தேசிய மக்கள் சக்தி இலங்கைச் சட்டத்தை மீறுகின்றது என்று அவர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார். ஜனதா விமுக்தி பெரமுன கட்சியின் ஒரு பிரிவே தேசிய மக்கள் சக்தி என்ற பெயருடன் செயற்பட்டு வருகிறது என நாகானந்த கொடிதுவக்கு தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார். (ஒ-6)



## கெஹலியவின் விசாரணைக்கு மொட்டுக் கட்சி ஆதரவளிக்கும்

கொழும்பு, பெப்.9

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தொடர்பில் முன்னெடுக்கப்பட்டுவரும் விசாரணைகளுக்கு சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சி முழுமையான ஆதரவை வழங்கும் என்று அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கெஹலிய ரம்புக்வெல தொடர்பில் விசாரணை நடைபெறுகின்றது, அந்த விசாரணைக்கு அவரும் ஒத்துழைப்பு வழங்குகின்றார். கட்சி என்ற வகையில் எந்தவொரு விசாரணைக்கும் முழுமையான ஆதரவை வழங்கத் தயார்.

அதேபோல இதன் பின்னணியில் வேறு நபர்கள் உள்ளனரா? என்பது பற்றியும் பொலிஸார் விசாரணை நடத்தவேண்டும். அமைச்சரவைப் பத்திரம் பற்றியும், அமைச்சரவை அனுமதி குறித்தும் தகவல் வெளியாகியுள்ளது. அவை தொடர்பிலும் தேடிப் பார்க்க வேண்டும். இதை அரசியல் மயப்படுத்தினால் எவருக்கும் நீதி கிடைக்காது- என்றார். (ஒ-44)

## மக்கள் பாதுகாப்பு அமைச்சிடம் இணையப் பாதுகாப்புச் சட்டம்

கொழும்பு, பெப்.9

நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இணையப் பாதுகாப்புச் சட்டம் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. இந்த வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ளது.

இதேவேளை எதிர்க்கட்சிகள் மற்றும் சமூக ஆர்வலர்களின் ஆட்சேபனைகளுக்கு மத்தியிலும் கடந்த ஜனவரி 24 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் குறித்த சட்டம் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## கொள்கையை கைவிடல் நாட்டுக்கு நன்மையே

### ஜே.வி.பி.க்கு நாமல் சுட்டிக்காட்டு


கொழும்பு, பெப்.9

இந்திய எதிர்ப்புக் கொள்கையைக் கைவிட்டு அந்த நாட்டுடன் பேச்சு நடத்துவதற்கு ஜே.வி.பி. சென்றுள்ளமையானது ஏற்புடைய அணுகுமுறையாகும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஜே.வி.பி.யினர் இந்தியா சென்றுள்ளமை சிறந்த விடயமாகும். நாட்டுக்கு முதலீடுகள் வரும்போது அந்த முதலீடுகளால் நாட்டுக்குக் கிடைக்கும் நன்மைகள் பற்றி ஆராயவேண்டும். முதலீட்டாளரை ஒரு முதலீட்டாளராகவே பார்க்கவேண்டும்.

நாட்டுக்கு முதலீடுகள்வரும்போது அதன்மூலம் நாட்டுக்குக் கிடைக்கும் நன்மைகளை அடிப்படையாகக் கொண்டே முடிவுகள் எடுக்கப்படவேண்டும். ஆகவே, இந்தப் பயணத்துடன் ஜே.வி.பி.யினரின் அணுகுமுறை மாறும் என நம்புகின்றோம் - என்றார். (ச-44)



## தேர்தல் இலக்கில் எதிரணி இயங்கக்கூடாது!

### நிதி இராஜாங்க அமைச்சர் கோரிக்கை

கொழும்பு, பெப்.9

தேர்தலை மட்டுமே இலக்காகக் கொண்டு செயற்படாமல் நாட்டை மீட்பதற்கான பொதுப்பயணத்தில் இணைவதற்கான ஜனாதிபதியின் அழைப்பை எதிரணிகள் ஏற்க வேண்டும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் [illegible] தெரிவித்தார். "ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையில் உள்ள நல்ல விடயங்களை சபைக்குள் இருந்து செவிமடுக்கமுடியாது என்பதால்தான் ஐக்கிய மக்கள் சக்தி வெளிநடப்புச் செய்தது. எனினும், அக்கட்சிக்குள் பிளவு உள்ளது என்பதையே அது நாட்டுக்கு வெளிப்படுத்தியது. ஒரு தரப்பினர் வெளிநடப்புச் செய்தாலும், மற்றைய தரப்பு சபைக்குள் இருந்தது. ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை பற்றிக் கதைக்காமல் தேர்தல் பற்றியே எதிரணி பிரதம கொறடா கதைக்கின்றார். இதன்மூலம் அவர்களின் நோக்கம் தெளிவாகின்றது" -என்றார். (ஒ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of Jaffna

Centre for Open and Distance Learning | Department of Computer Science

## கணினிப் புலத்தில் கற்கை நெறிகள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையம், கணினி விஞ்ஞானத் துறையால் வழங்கப்படும் பின்வரும் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்களை வரவேற்கின்றது.

**Building Blocks of Internet of Things**
- 10 Saturdays (9:00 - 12:00)
- Course Fee LKR 15,000.00

**Python for Problem Solving**
- 10 Saturdays (13:00 - 16:00)
- Course Fee LKR 10,000.00

**Responsive Web Development**
- 10 Sundays (9:00 - 12:00)
- Course Fee LKR 10,000.00

**Advanced Web Development**
- 10 Sundays (13:00 - 16:00)
- Course Fee LKR 10,000.00

- கணினிப் புலத்தில் தமது அறிவை மேம்படுத்த ஆர்வமுள்ள மாணவர்கள், ஆசிரியர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள், மற்றும் அனைவரும் விண்ணப்பிக்கலாம்.
- தமிழ் மற்றும் ஆங்கிலத்தில், இருமொழிமூல வகுப்புக்கள், நேரடிச் செயன்முறை அமர்வுகள் மூலம் நடைபெறும்.
- தருக்க மற்றும் கணிதப் புதிர்களை உள்ளடக்கிய தகுதிகாண் பரீட்சை மூலம் விண்ணப்பதாரிகள் கற்கைநெறிகளுக்குள் உள்வாங்கப்படுவார்கள்.

| விண்ணப்ப முடிவுத்திகதி | தெரிவுப் பரீட்சை | கற்கைநெறிகள் ஆரம்பம் |
|---|---|---|
| 19/02/2024 | 24/02/2024 | 09/03/2024 |

விண்ணப்பங்கள், "www.csc.jfn.ac.lk/expr/application-process" எனும் இணையத்தளத்தில் வழங்கப்பட்டுள்ள நிகழ்நிலை விண்ணப்பப் படிவத்தினூடாக சமர்ப்பிக்கப்படவேண்டும்.


முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட உங்கள் விண்ணப்பத்தை, விண்ணப்பக் கட்டணம் ரூ. 500.00 க்கான வங்கிப்பற்றுச்சீட்டின் மென்பிரதியை இணைத்துச் சமர்ப்பிக்கவும்.

கட்டணங்கள் அனைத்தும், வழமையான வைப்புச் சீட்டைப் பயன்படுத்தி, மக்கள் வங்கியின் கிளையொன்றினூடாக மட்டுமே செலுத்தப்படவேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு:
www.csc.jfn.ac.lk/expr
021 221 8194

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்


# நன்றி நவிலல்



தோற்றம் 31 . 12 . 1942

மறைவு 01 . 02 . 2024

கடந்த 01.02.2024 அன்று எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட எம் அன்புத்தாய்

## திருமதி கந்தசாமித்துரை வள்ளிநாயகி
### (கிண்ணியம்மா)

அவர்களின் மரணச்செய்தி கேட்டு உடன் வந்து பல வழிகளிலும் உதவி செய்தவர்களுக்கும், நேரில் வந்து எம் துயரில் பங்கு கொண்டவர்களுக்கும். மேலும் தொலைபேசி மூலம், இணைய வழி மூலம் ஆறுதல் நல்கியவர்களுக்கும் பதாகைகள், மலர் வளையங்கள் மூலம் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், தொலை தூரங்களிலிருந்து நேரில் வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அலுவலர்கள், ஊர் மக்கள் மற்றும் நன்றி கூறத் தவறிய அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(IN26591) N-1

# மரண அறிவித்தல்



பிறப்பு 23.03.1942

இறப்பு 08.02.2024

## சாமுவேல் ஜோசப் செபரெட்ணம்
### (உரிமையாளர் திரேசா தளபாடம்)

யாழ்ப்பாணம் மத்தியூஸ் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சாமுவேல் ஜோசப் செபரெட்ணம் நேற்று (08.02.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வில்லியம் சாமுவேல் சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மிக்கேல் மேரிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், திரேசம்மாவின் அன்புக் கணவரும், மரினா (அனிகா) வின் அன்புத் தந்தையும், குரூஸ் கலாட் அவர் களின் மாமனாரும், ஜொனிஸ்ரன், மேர்சிகா, ஜொனால்ரன், கிறிஸ்ரிக்கா ஆகியோரின் அன்புப் பேரனும், மகேஸ்வரி, காலஞ்சென்ற செல்வரெட்ணம், புஸ்பராணி (ராணி). அரியரெட்ணம் ஆகியோரின் சகோதரனும், பெரியபிள்ளை, காலஞ்சென்ற பொன்னுத்துரை, அஞ்சலா, பிறிஜற், சாமியாப்பிள்ளை ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை திருப்பலி இன்று (09.02.2024) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு புனித கொஞ்சேஞ்சி மாதா ஆலயத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

41/ 20, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
021 221 7244

தகவல்
குடும்பத்தினர்
(திரேசம்மா)

(CS 53889) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலை மாணவன் பிணையில் விடுவிப்பு

போதைப்பொருள் பாவித்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவனை மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் ஆள் பிணையில் செல்ல நேற்று முன்தினம் அனுமதித்தது.

வட்டுக்கோட்டைப் பொலிஸார் தாக்கினர் எனத் தெரிவித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியப் பணிமனையில் பல்கலைக்கழக மாணவன் முறைப்பாடளித்து யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டார். மாணவன் போதைப்பொருள் பயன்படுத்தியிருந்தமை மருத்துவப் பரிசோதனையில் கண்டறியப்பட்டது.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் மாணவனை கைதுசெய்த வட்டுக்கோட்டைப் பொலிஸார் மல்லாகம் நீதிமன்றில் நேற்று முன்தினம்முற்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிவான் சந்தேகநபரான மாணவனை பிணையில் செல்ல அனுமதித்தார்.

பல்கலைக்கழக மாணவர் என்ற அடிப்படையில் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு சந்தேகநபரை புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்பாது தொடர்ச்சியாகக் கண்காணிக்கவும் உளவள ஆலோசனை வழங்கவும் சமூக சீர்திருத்த நன்னடத்தைப் பிரிவுக்கு மல்லாகம் நீதிவான் எம். கே. முகமட் கிஸ்மி உத்தரவிட்டார். (ஒ-125)


## துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரியின் ஆசிரியர் **திரு. V. கணேசலிங்கம்**
அவர்களின் பாசமிகு மாமியார்
**திருமதி சின்னத்துரை கண்மணி**
அவர்கள் 28.01.2024 அன்று காலமானார்
அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய வட்டம்
**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.**

(cs.53901) (N-1)



## வேயப்பட்ட தென்னோலை கிடுகுகள் மற்றும் உழவு இயந்திரங்களினை (Tractor) வாடகைக்கு வழங்குபவர்களுக்கான கூறுவிலை

ஆனையிறவு உப்பளத்துக்கு மாதாந்தம் 12000 கிடுகுகள் வீதம் ஆண்டுக்கு 80,000 வேயப்பட்ட தென்னோலைக் கிடுகுகளும் உப்பு ஏற்றுவதற்காக வாடகைக்கு உழவு இயந்திரங்களும் சேவை வழங்குநர்களிடமிருந்து மூடப்பட்ட கூறுவிலை கோரப்படுகின்றது. தகைமையுடையவர்கள் விண்ணப்பப் படிவத்தை ரூ.500/= செலுத்தி **16.02.2024**ம் திகதி **01.30PM**க்கு முன்னர் தனித்தனியான விண்ணப்பப் படிவத்தினூடாக விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பதாரர்கள் கூறுவிலை திறக்கப்படும் நேரத்தில் நேரடியாகப் பங்குபற்ற முடியும். விண்ணப்பப் படிவத்தையும் மேலதிக தகவல்களையும் **தேசிய உப்பு நிறுவனம், A9 வீதி, ஆனையிறவு, கிளிநொச்சி என்ற முகவரியில் நேரடியாகவும், 0213204556, 0742023334** என்ற தொலைபேசி இலக்கங்கள் ஊடாகவும் **nationalepass@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரி ஊடாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**முகாமையாளர்,**
**தேசிய உப்பு நிறுவனம்,**
**ஆனையிறவு, கிளிநொச்சி.**

(cr.41760) (N-1)


## 'செம்பாத்தாள்' கூத்துருவ நாடகம்

யாழ்., பெப்.9

திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கும் 'செம்பாத்தாள்' எனும் கூத்துருவ நாடகம் இல. 238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 6.45 மணிக்கு இடம்பெறும். (ப)

## தேவிபுரம் வீதியோர வடிகால் மக்கள் இணைந்து அமைப்பு!

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, தேவிபுரம் கிராமத்தில் முதன்மை வீதியின் இரு புறங்களிலும் வடிகால் அமைக்கும் பணிகளை கிராம மக்கள் முன்னெடுத்துள்ளனர். பரந்தன் - புதுக்குடியிருப்பு வீதியில் தேவிபுரம் சந்தியில் இருந்து தேவிபுரம் நோக்கிச் செல்லும் ஆறு கிலோ மீற்றர் வரையான வீதி 2018ஆம் ஆண்டு நிரந்தரமாகப் புனரமைக்கப்பட்டது. ஆனால் வீதியின் இருபுறமும் வடிகால்கள் அமைக்கப்படாததன் காரணமாக வெள்ளம் ஏற்படும் சூழல் காணப்படுகின்றது. இந்தநிலையில் இப்பகுதி கடற்றொழிலாளர் சங்கத்தினர் மற்றும் விளையாட்டுக் கழகத்தினர் இணைந்து வீதியின் இரு புறமும் வடிகால் அமைக்கும் பணிகளை முன்னெடுத்துள்ளனர். (ஒ-13)

## திருவுருவச் சிலை திறப்புவிழா

யாழ்ப்பாணம், பெப்.9

நாமகள் முன்பள்ளிக் கல்வி நிலையத்தின் இயக்குநரும் முன்னாள் ஆசிரியருமான அமரர் நாகேஸ்வரி தர்மலிங்கத்தின் திருவுருவச் சிலை திறப்புவிழா நாமகள் முன்பள்ளி கல்வி நிலைய முற்றத்தில் இன்று காலை 9 மணிக்கு இடம் பெறவுள்ளது. (ப-159)

## அடைவு மட்டம் மிகக்குறைவு

வவுனியா, பெப்.9

வடமாகாணக் கல்வி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலில் வடக்கில் பொருண்மியம் நலிவுற்ற மாணவர்களின் அடைவு மட்டங்கள் மிகவும் குறைவாகவுள்ளன என்று கருத்துகள் முன்வைக்கப்பட்டுள் ளன.

வவுனியா நகர சபை மண்டபத்தில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலிலேயே இந்த விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டன. (ப-110)

## ஆரம்பம்

மன்னார், பெப்.9

மன்னார், நானாட்டான் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத்தால் செம்மண் தீவில் தேங்காய் எண்ணெய் பிரித்தெடுக்கும் தொழில் முயற்சி கடந்த திங்கட்கிழமை ஆரம்பிக்கப் பட்டது. (ப-75)


## பன்னிரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் நடராசா காசிவேந்தன்**
(MA, B.Com, Dip. in. pds, Dip.in.Mgt
(முன்னாள் முகாமைத்துவ பணிப்பாளர் சமுர்த்தி மகாசங்கம் உடுவில்)



தோற்றம் 25.06.1967
மறைவு 22.01.2012
திதி: தை அமாவாசை (09.02.2024)

தர்மத்தின் தலைவனாய்
குடும்பத்தின் குலவிளக்காய்
தரணியிலே வந்துதித்த எங்கள் அப்பாவே !
கண்ணிமைக்கும் நொடிப்பொழுதில்
காலன் உங்களை அழைத்ததேனோ !
அன்று நடந்தது இன்றுபோல் இருக்கின்றது
காலம் கடந்து போனாலும் எங்கள்
கண்களில் கண்ணீர் வடிகின்றது
ஆண்டுகள் பன்னிரண்டு ஆனாலும்
என்றும் உங்கள் நினைவுகளுடன்..

**மனைவி, பிள்ளைகள்.**
**கற்பகப்பிள்ளையார் கோவிலடி,**
**உடுவில் கிழக்கு, சுன்னாகம்.**

(cs.27830)



## ஆதன பெயர்மாற்றம் தொடர்பான அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபை, உப அலுவலகம், சுன்னாகம்.

### வட்டாரம்-04, டாக்டர்.சுப்பிரமணியம் வீதி, ஆதன இல - 327/2

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் சுன்னாகம் உப அலுவலகத்திற்குட்பட்ட டாக்டர்.சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம் எனும் முகவரியில் அமைந்துள்ள ஆதனமானது எமது ஆதனப் பதிவேட்டில் **வட்டாரம்- 04, டாக்டர்.சுப்பிரமணியம் வீதி, ஆதன இல. 327/2ல் Mr.K.மார்க்கண்டு உரிமைகோருபவர் 1. யோகுப்பிள்ளை, சுப்பிரமணியம் தவராசா** எனும் பெயரில் உள்ளது.

பிரசித்த நொத்தாரிசு **வே.சிவசுப்பிரமணியம்** முகதாவில் வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்குப்பகுதி உடுவில் கோவிற்பற்று **சுன்னாகம்** இறை, வலிகாமம் தெற்கு பிரதேசசெயலர் பிரிவு, J/199 கிராமசேவகர் பிரிவில் அமைந்துள்ள **"தெண்டன் தோட்டம்"** எனக்குறிப்பிடப்பட்டுள்ள **குழி** 13.59 உடைய ஆதனமானது 2010.02.05 ஆம் திகதிய 73 ஆம் இலக்க உறுதி மூலம் வெளிப்படுத்தல் செய்யப்பட்டுள்ளது.

**அதன் எல்லைகளாக:**

- **கிழக்கு**- இராசகிளி நாகேஸ்வரனின் ஆதனம்
- **வடக்கு**- ஞானவைரவர் கோவிலுக்குரிய ஆதனம்
- **மேற்கு** - ஒழுங்கை
- **தெற்கு** - ஒழுங்கை

மேலும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் **ம.சிற்றம்பலம்** அவர்களால் 2009.05.16இல் அளந்து தயாரிக்கப்பட்ட 2362 ஆம் இலக்க வரைபடத்தில் **துண்டு** 01 ஆகிய **குழி** 13.59 ஆகும். இவ் ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு **வே.சிவசுப்பிரமணியம்** அவர்கள் மூலம் 2010.02.05 ஆம் திகதிய 73 ஆம் இலக்க **வெளிப்படுத்தல் உறுதியால், கணக்கர்வளவு, கந்தரோடை, சுன்னாகம்** என்னும் இடத்தை சேர்ந்த **சுப்பிரமணியம் தவராசா பெண் மேரிஜெசிந்தா** (607261911V) எனும் பெயரில் பெயர்மாற்றம் செய்வதற்காக விண்ணப்பித்துள்ளனர்.

எனவே இப்பெயர்மாற்றம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் அல்லது உரிமை கோருபவர்கள் எவராவது இருந்தால் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு எவரும் ஆட்சேபனை தெரிவிக்கவோ உரிமைகோரவோ இல்லையெனின் குறித்த ஆதனமானது **சுப்பிரமணியம் தவராசா பெண் மேரிஜெசிந்தா** எனும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

மேலும் இப்பெயர் மாற்றத்தால் ஏற்படக்கூடிய எவ்விளைவுகளிற்கும் வலிகாமம் தெற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.** (cs.53903) (N-1) 09/02/2024



ஓம் விராட்விஸ்வ பிரமனேநமவ

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் **நமசிவாயம் தர்மலிங்கம் ஆசாரி (சின்னன்னை)**



தோற்றம் 08.10.1933
மறைவு 11.02.2021
திதி: தை அமாவாசை

எங்கள் உயிரில் கலந்த தந்தையே!
எம்மை விட்டு பிரிந்து ஆண்டுகள் மூன்று
ஓடி மறைந்ததையா நித்தம் எங்கள் கண்களுக்குள்
நிறைந்திருக்கும் எங்கள் அன்புத் தந்தையே
நினைவெல்லாம் உங்களைச் சுமந்தல்லோ நிற்கின்றோம்
**உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனை பிரார்த்திக்கின்றோம்**

அன்னை இல்லம்
15/16, நடுத்தெருலேன் அரியாலை, யாழ்ப்பாணம்.
077 910 3392 / 077 676 0671

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், குடும்பத்தினர்.



## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**மல்லிகாதேவி (மல்லி) மகேந்திரராஜா**

தோற்றம் 24.11.1927
மறைவு 04.02.2019
திதி: அமாவாசை (09.02.2024)


கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந் நாளும் உயிர் வாழும்

மேதேஸ் லேன்,
மானிப்பாய்.


பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(cs.53885) (N-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் 'ஓவியங்கள் ஊடாக இந்து சமய தத்துவங்களும் பெருமைகளும்' எனும் தொனிப்பொருளிலான கருத்தரங்கு அண்மையில் நடைபெற்றது. மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கருத்தரங்கில் உலகப் புகழ் பெற்ற ஓவியர் மு.பத்மவாசன் பங்குபற்றி கருத்துரை வழங்கினார். (ய-75)



சண்டிலிப்பாய் ஸ்ரீ காளியம்பாள் ஆலயத்தின் சங்காபிஷேக நிகழ்வில் ஆசிரியர் சோ.ரோகன் ராஜ் எழுதிய 'பூவரச நாயகி ஆடுகிறாள்' என்னும் ஊஞ்சல்பாட்டு அண்மையில் வெளியிடப்பட்டது. (ப-63)

கல்வியங்காடு, ஞானபாஸ்கரோதயா முன்பள்ளி வளாகத்தில் பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்ட மூலிகைச் செடிகள், மரக்கன்றுகள் நாட்டும் நிகழ்வு ஜே/259 கிராம அலுவலர் தயாபரன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் அபிவிருத்தி உத்தியோகத்தர் தயாளினி, கல்வியங்காடு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் தி.பன்னீர்ச்செல்வம், முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் முன்பள்ளிச் சிறார்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ப-66)






கிளிநொச்சி, அறிவியல் நகர்ப் பகுதியிலுள்ள 'ஜேர்மன் ரெக்' எனும் நிறுவனத்தின் செயற்பாடுகளைக் கண்காணித்து, குறை நிறைகளுக்ுத் தீர்வுகாணும் நோக்குடன் குறித்த நிறுவனத்துக்கு அமைச்சர் சுசில் பிரேமஜயந்த விஜயம் மேற்கொண்டார். நிகழ்வில் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் அங்கயன் இராமநாதன், கல்லூரி முதல்வர், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-113)



முல்லைத்தீவு, உடையார் கட்டு வடக்குப் பிரதேசத்தில் முதியோருக்கானதேசியசெயலக நிதி அனுசரணையில் மாவட்ட செயலகம் ஊடாக புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்தின் சமூகசேவைகள் திணைக்களத்தின் கீழ் முதியோர் ஓய்வகம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. (ப-19)



முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மன்னாகண்டல் வசந்தபுரம் மற்றும் கெருடமடுக் கிராமத்தில் வசிப்பவர்களுக்கு இலங்கை செஞ்சிலுவைச்சங்கம் முல்லைத்தீவுக் கிளையின் ஏற்பாட்டில் இலவச மருத்துவமுகாம் அண்மையில் நடத்தப்பட்டது. (ப-19)



யாழ். உடுவில் மகளிர் கல்லூரியின் இருநூறாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, கல்லூரி மண்டபத்தில் கல்லூரியின் அதிபர் ரொஷானா மதுரமதி குலேந்திரன் தலைமையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நிகழ்வுகள் இடம்பெற்றன. நிகழ்வில் விருந்தினர்களாக கல்லூரியின் முன்னாள் அதிபர் ஷிரானி மில்ஸ், தென்னிந்தியத் திருச்சபை பேராயர் கலாநிதி வே.பத்மதயாளன், தென்னிந்தியத் திருச்சபை முன்னாள் பேராயர் ஜெபநேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ப-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாந்தனின் பயணத்துக்கான கடவுச்சீட்டு அனுப்பிவைப்பு

யாழ்ப்பாணம், பெப். 9
சாந்தனை இலங்கைக்கு அழைத்து வருவதற்காக, அவருக்குரிய கடவுச்சீட்டு தேவைப்பட்ட நிலையில், இலங்கை குடிவரவு - குடியகல்வு சட்டதிட்டங்களின் அமைவாக அவருக்குரிய கடவுச்சீட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
இந்திய வெளியுறவுத்துறைக்குச் சாந்தனுடைய கடவுச்சீட்டு அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாக இலங்கை வெளியுறவு அமைச்சால் அறியத்தரப்பட்டுள்ளது.
இதன்படி, சாந்தன் இந்தியாவிலிருந்து இலங்கைக்குப் பயணம் செய்வதற்கான ஏற்பாடுகள் வரும் நாள்களில் இந்திய அரசால் மேற்கொள்ளப்படவுள்ளது. (ம)

# பயிற்சி நிலையம் அங்குரார்ப்பணம்


முல்லைத்தீவு, பெப்.9
முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள உடையார்கட்டுப் பிரதேசத்தில் வடமாகாணத்துக்கான சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் பயிற்சி நிலையம் கடந்த வாரம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.
மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் விருந்தினர்களாக சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மு. களுவாராச்சி, சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் சத்தியசீலன், பெண்கள், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் மேலதிக செயலாளர், மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் மு.முபராக், பிரதேச செயலாளர் ஜெயகாந், சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் சிரேஷ்ட அலுவலர்கள், முல்லைத்தீவு மாவட்ட சமுர்த்தி தலைமை அலுவலக உத்தியோகத்தர்கள், பிரதேச செயலகங்களின் சமுர்த்தி அலுவலக உத்தியோகத்தர்கள், வங்கிச் சங்க உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி வங்கி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-75)

## தெல்லிப்பழையில் கண் பரிசோதனை

யாழ்ப்பாணம், பெப். 9
கண்புரை சத்திரசிகிச்சை செய்ய வேண்டிய நோயாளர்களைப் பரிசோதனை செய்து தெரிவுசெய்யும் கண்பரிசோதனை முகாம் நாளை காலை 8 மணிதொடக்கம் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் இடம்பெறவுள்ளது.
இதில் தெரிவு செய்யப்படும் நோயாளர்களுக்கான கண்புரை சத்திரசிகிச்சை யாழ். போதனா மருத்துவமனையில் முற்றிலும் இலவசமாக செய்யப்படும்.
எனவே கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ள நோயாளர்கள் மேற்படி கண்பரிசோதனை முகாமில் கலந்து கொண்டு தங்கள் பெயர்களைப் பதிவுசெய்யுமாறு யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (ம-100)

வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள்
DHL
சகல நாடுகளுக்கான கடிதங்கள் 3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
சகல நாடுகளுக்கான பொதிகள் 5-7 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
திருமுருகன் கொம்நெற்
321, K.K.S வீதி யாழ்ப்பாணம்.
0777 554 528

முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



தோற்றம் : 07.11.1938 மறைவு : 21.01.2023

அமரர் சுப்பிரமணியம் சின்னத்துரை (இரத்தினசிங்கம்)

திதி 09.02.2024

தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று (குறள் எண் 236)

உங்கள் அழகான முகமும் அரவணைப்பும் உங்கள் நினைவுகளும்,
நெஞ்சை விட்டு அகலவில்லை அப்பா

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி இன்று 09.02.2024 வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

கைதடி மத்தி
குமரநகர்
கைதடி.

நினைவுகளுடன்
பிள்ளைகள்
மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டுறவுக் கிராமிய வங்கி

### புதிய கட்டடத் திறப்பு விழா

தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கூட்டுறவுக் கிராமிய வங்கியின் புதிய கட்டடத் திறப்பு விழா எதிர்வரும் 10.02.2024ம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு யாழ் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு.கி. சந்திரசேகரன் அவர்களால் திறந்து வைக்கப்படவுள்ளது.
புதிய கட்டடத் திறப்பு விழாவினை முன்னிட்டு 10.02.2024 அன்றைய தினம் மேற்கொள்ளும் ரூ50,000.00 நிலையான வைப்புகளுக்கு மேல்.

- வருடாந்த வட்டி வீதம் 13%
- மாதாந்த வட்டி வீதம் 14%

வழங்கப்படும் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.
பொது முகாமையாளர்,
தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம்,
கொடிகாமம். (CR 41762) S-1

## மாவட்ட நீதிமன்றம், பருத்தித்துறை.

குடியியல் நடவடிக்கைச் சட்டக்கோவையின்
பிரிவு 16 இன் கீழாக அறிவித்தல்

நம்பிக்கை பொறுப்பு கட்டளைச் சட்டத்தின் பிரிவு 102 (2) இன் கீழான விண்ணப்பம்

01. பொன்னம்பலம் துஜீவ்
பற்பை வதிரி கரவெட்டி

02. அமிர்தலிங்கம் செல்வவிநாயகம்,
வீரணங்கல் வதிரி கரவெட்டி

03. கதிர்காமர் யோகேந்திரன்
துலாக்கட்டு வீதி வதிரி கரவெட்டி

04. நடராசா கைம்பெண் லீலா
சின்ன உடையார் வளவு வதிரி கரவெட்டி.

05. பாலசுப்பிரமணியம் மங்கையர்கரசி.
யார்வத்தை வதிரி கரவெட்டி

எதிர்

வழ.இல. நம்பிக்கைச் சொத்து /195/23

வழக்காளிகள் - எதிராக

01. திருமதி இந்துமதி ரவிச்சந்திரன்
இரும்பு மதவடி வதிரி கரவெட்டி

02. திரவியநாயகம் தவக்குமார்
புலவராவோடை வதிரி கரவெட்டி

எதிராளிகள்

மேற்படி இலக்க வழக்கின் வழக்காளிகளால் J/ 360 கரணவாய் வடக்கு கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட "சக்கலாவத்தை ஞானவைரவர் ஆலயம்" தொடர்பாக 2016ம் ஆண்டு தை மாதம் 17ம் திகதி குறித்த ஆலயத்திற்கு அதன் யாப்புக்கும் இணங்க தெரிவு செய்யப்பட்டதுமான அமிர்தலிங்கம் தில்லைநாதனை தலைவராகவும் இராசேந்திரன் யோகேந்திரனை பொருளாளராகவும் கொண்ட பரிபாலனசபையே குறித்த ஆலயத்தின் சட்டரீதியான பரிபாலனசபை என்ற கோரிக்கையை பிரதான நிவாரணமாக கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
எனவே வழக்காளிகளின் பிராதில் வேண்டப்பட்ட நிவாரணம் தொடர்பில் எவராயினும் ஏதேனும் ஆட்சேபனை தெரிவிக்க விரும்பின் 14.03.2024ஆம் திகதி காலை 9.00க்கு இம்மன்றின் திறந்த மன்றில் தோன்றி தெரிவிக்குமாறு குடியியல் நடவடிக்கை சட்டக்கோவையின் பிரிவு 16இன் கீழான அறிவித்தல் தரப்படுகின்றது.

**2024 ஆம் ஆண்டு மாசி மாதம் 08 ஆம் திகதி**
**மன்றின் கட்டளைப்படி**

பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
பருத்தித்துறை.

வரைபு
வழக்காளிகளின் சட்டத்தரணி

### ஆதன அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வடமராட்சிப்பகுதி வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலாளர் பிரிவு வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை J/ 360 கரணவாய் வடக்கு கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட உடுப்பிட்டி கோவிற்பற்று கரணவாய் நவிண்டில் குறிச்சி இறை "சக்கலாவத்தை" நிலப்பரப்பு உத்தேசம் இருபது இதற்கெல்லை கிழக்கு நடராசாஐயர் விசயரத்தினத்துக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். வடக்கு பொலிகண்டி கந்தவன கோவிலுக்குரிய ஆதனமும். வீதியும். மேற்கு அப்பையா தவராசசிங்கத்திற்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு ஜெகநாதசர்மா கமலம்மாவிற்கும் மறுபேருக்குமுரிய ஆதனமும். வீதியும் இடதாங்கலும் இதைச் சேர்ந்தவைகளும் இதற்குள் அமையும் ஆலயமும்.

மன்றின் கட்டளைப்படி

பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
பருத்தித்துறை.

வரைபு
வழக்காளிகளின் சட்டத்தரணி

## நீதிமன்றத்தில்...

இறுதிப் போரின்போது இராணுவத்திடம் சரணடைந்த தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பான தகவல்கள் தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் 2019ஆம் ஆண்டு கோரப்பட்டிருந்தன. அந்தக் கேள்விக்கான பதிலாக, 'இலங்கை இராணுவத்திடம் தமிழீழ விடுதலைப் புலிகள் எவரும் சரணடையவில்லை. இலங்கை அரசாங்கத்திடமே புலிகள் சரணடைந்தார்கள்' எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த மறுப்புக்கு எதிராகத் தகவலறியும் ஆணைக்குழுவில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மேன்முறையீடு மூன்று வருடங்களுக்குப் பின்னர் கடந்த 2022 ஆம் ஆண்டு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்த விசாரணைகளின் போது சட்டத்தரணிகளான சுவஸ்திக்கா அருலிங்கம், சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ்.ரத்னவேல் ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர். நீண்ட விசாரணைகளின் பின்னர் சரணடைந்த புலிகள் தொடர்பான தகவல்களை வழங்க மறுத்த இராணுவத்தின் தீர்மானத்துக்கு ஆதரவளிக்கும் வகையில், 2023 ஆம் ஆண்டு நவம்பர் 8ஆம் திகதி தகவலறியும் ஆணைக்குழு தீர்ப்பு வழங்கியிருந்தது.

ஆணைக்குழு வழங்கிய தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீட்டு மனுத் தாக்கல் செய்யப்பட்டது. மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் டி.என்.சமரக்கோன் முன்னிலையில் இந்த மனு நேற்றுமுன்தினம் பரிசீலனைக்கு எடுத்துகொள்ளப்பட்டது. இதன்போதே இறுதிப் போர்க் காலத்தில் சரணடைந்த தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பான தகவல்களை வழங்க மறுத்தமைக்கு எதிராக, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணைக்கு முன்னிலையாகுமாறு இலங்கை இராணுவத்துக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இதன்போது, மனுவைப் பரிசீலனை செய்திருந்த நீதியரசர் டி.என்.சமரக்கோன், மனுதாரர் சார்பில் ஆரம்பகட்ட பரிசீலனைகள் அவசியமில்லை எனவும் எதிர்வரும் மார்ச் 28 ஆம் திகதி இலங்கை இராணுவம்நீதிமன்றில்முன்னிலையாக வேண்டும் எனவும் அறிவித்தல் விடுத்தார். (அ-ம)

## இனப்...

தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் ஒரு வார்த்தைகூட இடம்பெறாத ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையை முற்றாக நிராகரிக்கின்றோம் எனவும் அவர் கூறினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் ஆற்றிய அரசாங்கத்தின் கொள்கை விளக்க உரை தொடர்பில் சபையில் நேற்று நடைபெற்ற சபை ஒத்திவைப்புவேளை பிரேரணைமீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் தமது உரையில் ஜனாதிபதி ஒரு வார்த்தையைக்கூட பேசவில்லை. தான் பதவியேற்றபோது, இனப்பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காணப்படும் என ஜனாதிபதி கூறியிருந்தார். சர்வகட்சி மாநாடுகளையும் மூன்று தடவைகள் நடத்தி இருந்தார். 75 ஆவது சுதந்திரதினத்துக்குள் இனப்பிரச்சினை தீர்க்கப்படும் என்றெல்லாம்கூட பறை சாற்றினார். ஆனால், 76 ஆவது சுதந்திரதினமும் முடிந்துவிட்டது. இந்நிலையில் ஜனாதிபதி ஆற்றிய கொள்கை விளக்க உரையில் இனப்பிரச்சினை தொடர்பில் அவர் மூச்சுக்கூட விடவில்லை.

ஜனாதிபதி எம்மைப் பேச்சுக்கு அழைத்தபோது, இது வெறும் வார்த்தைதான், தீர்வைக் காண்பதற்குரிய அரசியல் பலம் ஜனாதிபதிக்குக் கிடையாது. தீர்வை எதிர்ப்பவர்களை வைத்துக்கொண்டு போலிப் பெரும்பான்மைமூலம் எதனையும் செய்ய முடியாது, ஆக வார்த்தை ஜாலங்களால் ஜனாதிபதி ஏமாற்றுகின்றார் எனச் சுட்டிக்காட்டி இருந்தோம்.

எனினும், தீர்வு முயற்சிக்கு நாம் தடங்கலாக இருந்தோம் என்ற குற்றச்சாட்டு வரக்கூடாது என்பதற்காக சர்வகட்சி மாநாடுகளில் பங்கேற்றோம். அப்படிச் செய்தும்கூட முன்னேற்றம் இல்லை.

அதேவேளை, இந்த நாட்டில் பொருளாதாரப் பிரச்சினை ஏற்பட அத்திபாரமே தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைதான், இது தொடர்பில் பேச்சு நடத்தி முறையான அரசியல்தீர்வைமுன்வைக்காமல், ஆயுதத் தீர்வை முன்வைத்து, அதற்காகக் கடன்களைப் பெற்று பொருளாதாரத்தை ஆட்சியாளர்கள் நாசமாக்கினர். இனப்பிரச்சினையைத் தீர்க்காமல் தமிழ்த் தேசிய இனத்தின் அபிலாஷைகள் பூர்த்தி செய்யப்படாமல் இந்த நாட்டின் பொருளாதாரம் எப்போதும் சரிபட்டு வரப்போவதில்லை. எவ்வளவுதான் பேசினாலும், தான் செய்து முடித்துவிட்டேன் எனச் சொன்னாலும் உண்மை மக்களுக்குத் தெரியும். ஜனாதிபதித் தேர்தல்வரும்போதுமக்கள்விழிப்பாக இருந்து தமது பதிலை அளிக்கவேண்டும்.

வெறுமனே இது பொருளாதாரப் பிரச்சினை எனக் கூறிக்கொண்டு, அடிப்படைப் பிரச்சினையான தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கு ஒரு முடிவை எடுக்காமல் ஜனாதிபதி தொடர்ந்து முன்னோக்கிச் செல்வாராக இருந்தால் இந்நாடு மேலும் அதலபாதாளத்துக்குள் விழுவதை எவராலும் தடுக்கமுடியாது - என்றார். (அ-ஒ-44)

## கச்சதீவுத்...

இடம்பெறவுள்ள நிலையில், திருவிழாவுக்கான முன்னேற்பாடுகள் முழுமையடைந்துள்ளதுடன், பயண ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

திருவிழா தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்டச்செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் நேற்றுத் தெரிவித்ததாவது:-

கச்சதீவுத் திருவிழாவை முன்னிட்டு எதிர்வரும் 23ஆம் திகதி அதிகாலை 5 மணி தொடக்கம் மு.ப. 10 மணிவரை அரச மற்றும் தனியார் பேருந்துகள் யாழ்ப்பாணம்மத்தியபேருந்துநிலையத்திலிருந்து குறிகாட்டுவான் வரையில் சேவையில் ஈடுபடும். கச்சதீவுக்கான படகுச் சேவையானது, குறிகாட்டுவான், நயினாதீவு மற்றும் நெடுந்தீவு ஆகிய இறங்குதுறைகளில் 23ஆம் திகதி அதிகாலை 5 மணி முதல் நண்பகல் 12 மணிவரை சேவையில் ஈடுபடுத்தப்படும். குறிகாட்டுவான், நயினாதீவு மற்றும் நெடுந்தீவு ஆகிய துறைகளில் இருந்து பயணிக்கும் ஒவ்வொரு பயணிக்கும்ஒருவழிக்கட்டணமாக ஆயிரத்து 500 ரூபா அறவிடப்படும்.

வெளிமாவட்டங்களில் இருந்து சொந்தப் படகுகளில் திருவிழாவுக்குச் செல்வோர் தமது வசிப்பிடங்களுக்கு அருகிலுள்ள கடற்படை முகாம்களைத் தொடர்புகொண்டு உரிய அனுமதிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். தனியான படகுகளில் பயணம் மேற்கொள்பவர்கள் 23ஆம் திகதி மாலை 6 மணிக்கு முன்னதாக கச்சதீவை அடையக்கூடிய வகையில் பயணத்தை மேற்கொள்ளவேண்டும். கச்சதீவு உற்சவத்தில் கலந்துகொள்ளும் யாத்திரிகர்கள் தங்களுக்குத் தேவையான உணவு மற்றும் குடிதண்ணீர் ஏற்பாடுகளுடன் வருகை தருதல் வேண்டும். கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயமானது யாத்திரிகர்களின் புனிதத் தலமாகவும் காணப்படுவதால் மதுபாவனை முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது - என்றார். (அ-ம-125)

## எரிபொருள்...

மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர் டீ.வி.சானக தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் எரிபொருள் விநியோக நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு அனுமதியைப் பெற்றுக்கொண்டுள்ள அவுஸ்திரேலியாவின் யுனைட்டெட் பெற்றோலிய நிறுவனத்தை, குறித்த திட்டத்திலிருந்து நீக்குவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

சினோபெக் நிறுவனத்துக்கு எரிபொருள் விநியோக நடவடிக்கைகளுக்கு அனுமதியளிக்கப்பட்டமையால், எரிபொருள் இறக்குமதிக்காக வருடாந்தம் செலவிடப்படும் 500 மில்லியன் டொலரை அரசாங்கத்தால் மீதப்படுத்த முடிந்துள்ளது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐ.ஓ.சி. மற்றும் சினோபெக் ஆகிய நிறுவனங்களுக்கிடையில் போட்டி காணப்படுகிறது. இதன்மூலம் இனிவரும் காலங்களில் எரிபொருள் விலைகளில் மக்களுக்குச் சிறந்த நிவாரணம் கிடைக்கும் என்று நம்புகின்றோம்.

தற்போது அமெரிக்காவின் ஆர்.எம். பார்க் நிறுவனம் 3 மில்லியன் டொலரை வைப்புச் செய்துள்ளது. எனவே விரைவில் இந்த நிறுவனம் அதன் நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் என்று எதிர்பார்க்கின்றோம். ஆனால் அவுஸ்திரேலியாவின் யுனைட்டெட் பெற்றோலியம் நிறுவனம் கால அவகாசம் கோரியுள்ளபோதிலும் எவ்வித வைப்புக்களையும் பேணவில்லை. எனவே இந்தத் திட்டத்திலிருந்து அதனை நீக்கி விட்டு, ஏனையோருக்கு வாய்ப்புகளை வழங்குவதற்கு அமைச்சு மட்டத்தில் பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன - என்றார். (அ-ம)

## இறங்குதுறைப்...

பிரதிநிதிகள் வடக்கு மாகாண ஆளுநரை நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர். யாழ்.சுண்டுக்குளியிலுள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. மீனவர்களின் கோரிக்கையை செவிமெடுத்த வடக்கு ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், கடற்றொழில் அமைச்சருடன் பேச்சு நடத்தி இந்த விவகாரத்துக்குத் தீர்வொன்று பெற்றுத் தரப்படும் என்று தெரிவித்தார்.

இறங்குதுறைப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்குமாறுகோரி, ஆளுநர் அலுவலகத்தை முற்றுகையிட்டு மீனவர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை போராட்டம் நடத்தினர். அன்றையதினம் ஆளுநர் யாழ்ப்பாணத்தில் இல்லாத காரணத்தால் அவரைச் சந்திக்க முடியாத நிலை ஏற்பட்டிருந்தது. இதையடுத்து நேற்றையதினம் ஆளுநரை மீனவர்கள் சந்தித்தனர். இதன்போதே இறங்குதுறைப் பிரச்சினைகள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-66-26)

## டிப்பர்...

இடம்பெற்றுள்ளது. 40, 25, 23 மற்றும் 8 வயதுடையவர்களே இவ்வாறு காயமடைந்துள்ளனர். அவர்கள் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். கிளிநொச்சி மாவட்டத்தில் நெல் உலரவிடும் தளங்கள் குறைவாகக் காணப்படுகின்றமையால் விவசாயிகள் வீதிகளில் நெல்லை உலரவைக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தனர். இதனால் வீதிப் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டிருந்தது. இவ்வாறானதொரு பின்னணியில் இடம்பெற்றுள்ள இந்த விபத்து சர்ச்சையாகியுள்ளதுடன் வீதிப்பாதுகாப்பையும் கேள்விக்குட்படுத்தியுள்ளது. (அ-ம-13)

## விபத்து...

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி இந்தத் தகவலை நேற்று' உதயனுக்குத்' தெரிவித்தார். கடந்த வருடம் வீதி விபத்துகளால் ஆயிரத்து 559 பேர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் 76 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (அ-ம-125)

## மோ.சைக்கிள்...

யில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். துன்னாலை, வேம்படிப் பகுதியில் நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இவருடன்சென்றமற்றைய இளைஞர் சிறிய காயங்களுடன் பருத்தித்துறை ஆதாரமருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். (அ-ம-100)

## பயங்கரவாத...

இதன்போதே பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு எதிரான மனுக்கள் தொடர்பான விடயத்தை சபாநாயகர் அறிவித்தார். இது தொடர்பான மேலதிக விவரங்கள் பின்னர் தெரிவிக்கப்படும் எனவும் சபாநாயகர் அறிவித்தார். (அ-ம)

## ஜனாதிபதித்...

நிதியத்தின் வேலைத்திட்டம் உட்பட அரசின் திட்டங்களைக் குழப்புவதே இதன் நோக்கமாகும். தேர்தலை நடத்தினால் எல்லாப்பிரச்சினைகளும்தீர்ந்துவிடுமாம். ஒக்ரோபர் மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும். அந்தத்தேர்தலை ஒத்திவைக்கமுடியாது. தேர்தலுக்குத் தயாராகுங்கள். நாமும் தயார். அந்தத்தேர்தலில் முதுகெலும்புள்ள, நாட்டுக்குச் சேவை செய்யக்கூடிய, பொருளாதாரம் மற்றும் சர்வதேச அரசியல் தொடர்பில் அனுபவம் உள்ள தலைவர் யார் என்பதை உணர்ந்து மக்கள் அவரை ஆதரிப்பார்கள். இந்திரலோகத்தில் வாழ்பவர்கள்போல் அரசியல் நடத்தும் நபர்களை ஆதரிக்கும் அளவுக்கு மக்களின் சிந்தனை குன்றவில்லை - என்றார். (அ-ஒ-44)

## வடக்கின்...

நெதர்லாந்து நாட்டின் இலங்கைக்கான துணைத்தூதுவர் இவன் ருட்ஜென்ஸ், வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸை நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இதன்போதே வடக்கின் அபிவிருத்தி தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பில் ஆளுநர் தெளிவுபடுத்தினார். விடயங்களைக் கேட்டறிந்த நெதர்லாந்து நாட்டின் இலங்கைக்கான துணைத்தூதுவர் இவன் ருட்ஜென்ஸ், குடாநாட்டுக்கான குடிதண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான ஒத்துழைப்புகளை வழங்கத் தயார் எனக் கூறினார். அத்துடன் முதலீட்டுத் திட்டங்களை ஊக்குவித்து வடக்கு மாகாண அபிவிருத்திக்குத் தேவையான பங்களிப்பை வழங்கவும் தயார் என அவர் உறுதியளித்தார். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செங்கடலுக்கு இலங்கைக் கடற்படை பாதுகாப்புக்குச் செல்வது சாத்தியமில்லை



ஹௌத்தி கிளர்ச்சியாளர்கள் செங்கடல் ஊடாகப் பயணிக்கும் கப்பல்களைத் தாக்கும் நிலையில் அவற்றைத் தடுப்பதற்காக அமெரிக்காவுடன் இணைந்து பாதுகாப்புப் பணியில் ஈடுபட இலங்கை கடற்படை செல்வது சாத்தியமில்லை என இராணுவ ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். கிளர்ச்சியாளர்களால் ஏவப்பட்ட ஏவுகணையை, தான் தரித்து நின்ற இடத்திலிருந்து ஒரு மைல் தூரத்துக்கு முன்னதாகவே அமெரிக்க கடற்படைக் கப்பல் சுட்டு வீழ்த்தியிருந்தது. அவ்வாறான வசதிகள் எவையும் இலங் கைக் கடற்படையிடம் இல்லை. எனவே இலங்கைக் கடற்படையினர் அங்கு பாதுகாப்புப் பணிக்குச் செல்வது சாத்திய

மில்லை என்று இராணுவ ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ஒ-6)

## குடும்பமொன்றின் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு

வவுனியா, பெப். 9

செட்டிகுளத்திலுள்ள குடும்பமொன்றின் வாழ்வாதாரம் மற்றும் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது.

முகத்தான்குளம் கிராம அலுவலர் ஊடகவியலாளரிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக புலம்பெயர்ந்து பிரான்சில் வசிக்கும் சமூக செயற்பாட்டாளரான கந்தையா சிறிமுருகதாஸின் நிதி உதவியில் ஊடக உறவுகளின் பாலம் அமைப்பின் ஊடாக குடிதண்ணீர்த் திட்டம் வழங்கப்பட்டுள்ளது. மூன்று பிள்ளைகளுடன் வசிக்கும் விசேட தேவைக்குட்பட்ட குடும்பம் நீண்ட காலமாக குடிதண்ணீர் பெறுவதில் இடர்பாடுகளை எதிர்நோக்கியிருந்ததுடன், வீட்டுத்தோட்டத்துக்கான காணி இருந்தும் நீர் இல்லாமையால் சிரமங்களை எதிர்கொண்டிருந்தனர். இவற்றுக்குத் தீர்வு காணும் வகையில் மோட்டருடன் கூடிய குழாய்க் கிணறு மற்றும் நீர்த் தொட்டி என்பன அமைத்துக் கொடுக்கப்பட்டன.

(ஒ-18)

## சீவல் தொழிலாளருக்கும் என்.வி.கியூ. சான்றிதழ்

கொழும்பு, பெப்.9

சீவல் தொழிலாளர்களுக்கு என்.வி.கியூ. சான்றிதழ் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் கிரிஷாந்த பத்திராஜ தெரிவித்துள்ளார்.

விவசாய,பெருந்தோட்டத்துறை அமைச்சருடனான கலந்துரையாடலின்போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கள்,பதநீர் சீவுபவர்களுக்கும் தேங்காய் பிடுங்குபவர்களுக்கும் தேசிய தொழில் பயிலுநர் சபை ஊடாக இருவாரகால பயிற்சி வழங்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படவுள்ளது.

தேங்காய் பிடுங்கும் போதோ அல்லது கள், பதநீர் என்பன சீவும் போதோ மரத்திலிருந்து வீழ்ந்து பாதிப்புக்குள்ளானால் அவர்களுக்கு 5 இலட்சம் ரூபா கடன் வசதியை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-6)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப். 9

கோப்பாய் பிரதேச செயலகத்துக்குட்பட்ட 31 கிராம அலுவலர் பிரிவுகளிலுமுள்ள கமக்கார அமைப்பினருக்கான விசேட கலந்துரையாடல் ஒன்று கோப்பாய் பிரதேச செயலகத்தில் இன்று காலை 8.30 மணி தொடக்கம் இடம்பெறவுள்ளது. (ம)


### மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள
Bajaj 125 BBO தொடர் இலக்கம் உடைய
மோட்டார் சைக்கிள்
விற்பனைக்கு உண்டு.

076 810 2805

### வேலைக்கு ஆள் தேவை (பெண்)

தனியார் நிறுவனம் ஒன்றின் கைதடியில் அமைந்துள்ள தொழிற்சாலைக்கு உணவுப் பண்டங்கள் தயாரிக்கும் அடுப்பு வேலைக்கு நன்கு அனுபவமுள்ள பெண் வேலையாட்கள் தேவை. மாத சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி
இலக்கத்துடன் ஆர்வமுள்ளவர்கள்
தொடர்பு கொள்ளலாம்

தொடர்பு: 074 391 0843

### வேலையாட்கள் தேவை

பல சரக்குக் கடைக்கு அனுபவமுள்ள ஆண் வேலையாட்கள் தேவை. உடுவில் மானிப்பாய் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு

074 363 1559, 076 888 1857

### VACANCIES

Recently developed Medical Institution and Hospital having Vacancies to full fill as immediat appointment.

**01. CEO** (Chief Executive Officer / AO-Admin Officer)
- Previous experience regarding admin
- Fluent in 03 languages
- Age limit - 35 yrs.
- Highly duty concern
- Very attactive salary scale.

**02. Accountant and Account Clerk**
- Accountant - previous experience must
- Have leadership
- Control of accounts dept.
- Age limit >30 yrs.
- Good salary package

**03. HRM** (Human Resource Manager)
- Previous experience, Control / Maintanance of staff activity
- Should be > 30 - 35 yrs
- Good salary Package

**04. IT Technician**
- Well experience in IT related work

**05. Ambulance Driver** - Day & Night

Interview on : 11/02/2024 (Sunday) 9 AM
at Sunrise Medi Clinic
580, Hospital Road, JAffna.

Contact : 021 222 6069 / 021 222 8460
Mob : 070 6820 123

Candidate can send CV by E-mail: sunrisemediclini@gmail.com

### வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு அனுபவமுள்ள

- Store Keeper: ஆண், வயது எல்லை (25-55)
- Cashier: (ஆண், பெண்) 45 வயதிற்கு குறைவானவர்கள் A/L, Computer Knowledge இருந்தால் போதுமானது.

(CS 278361) V-1

தொடர்புகளுக்கு: 076 586 4967, 070 606 5504


### கண்ணீர் அஞ்சலி



மலர்வு 27 • 07 • 1941

உதிர்வு 07 • 02 • 2024

எமது குடும்ப நண்பர்களின் பாசமிகு தாயார்

**திருமதி மனோன்மணி சுப்பிரமணியம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


அன்னாரின் பிரிவால் துயருறும்

**ரஞ்சனாஸ் ரெக்ஸ்**

சாவகச்சேரி.

(cr.41758) (N-1)

### மரண அறிவித்தல்



**ஆறுமுகம் நாகேஸ்வரன்**

இணுவில் மேற்கை பிறப்பிடமாகவும். தாவடி தெற்கு கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் நாகேஸ்வரன் அவர்கள் 08.02.2024 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் சிவகாமிப்பிள்ளையின் அன்பு மகனும் நாகேஸ்வரியின் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான மதிவதனம். மலர்வதனம். மணிவதனம். கந்தசாமி ஆகியோரின் சகோதரனும். பாலச்சந்திரன். இராசேஸ்வரி. இந்திராணி சிவனேசன் (கோட்டக்கல்வி பணிப்பாளர் கோப்பாய்). ஆகியோரின் மைத்துனரும் கோவர்த்தனன் (சட்டத்தரணி). விஷ்ணுவர்த்தனி (லண்டன்). விஷ்ணுவர்த்தனன் (அபிவிருத்தி உத்தியோகத்தர். கரையோரம் பேணல் திணைக்களம் மாவட்டசெயலகம் யாழ்ப்பாணம்). ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுதாமதி (ஆசிரியர் யா/கொக்குவில் இந்துக்கல்லூரி). அசோகன் (லண்டன்). ஜீவனா (ஆசிரியர் யா/உயரப்பலம் மெ.மி.த.க.பாடசாலை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும். நிதுசன். அபிஷயா. அபிஷா. சகானா. ராகவி. ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11.02.2024 அன்று 10.00 மணியளவில் இல.120. குளப்பிட்டி ஆனைக்கோட்டை வீதி. கொக்குவில் மேற்கு. கொக்குவில் எனும் முகவரியில் இடம் பெறும் என்பதனை அறியத்தருகிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS 278411) V-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.02. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.